கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை

5-1-1975

50 காசு



RAAS/B/156 TAM



12 வயதும் அதற்கு மேற்பட்ட வயதுடைய குழந்தைகள் தங்களது சேமிப்புக்கணக்கை தாமே நடத்தலா

கோகுலம்

மலர் 3 ▪ இதழ் 20

ஜனவரி 5, 1975
ஆனந்த, மார்கழி 21.



உயிர்களிடத்து அன்பு
வேண்டும் - தெய்வம்
உண்மை யென்று
தானறிதல் வேண்டும்
-- பாரதியார்

சந்தா விவரம்:

உள்நாடு:
ஒரு வருடம் ரூ. 13-00
ஆறு மாதம் ரூ. 6-50

வெளிநாடுகள்:
ஆண்டுச் சந்தா ரூ. 25-00

கற்பனைக் கனவு மாளிகை!

மாயாஜால, மந்திர தந்திர தேவதைக் கதைகளில் வர்ணிக்கப்படும் கோட்டை அரண்மனை, கற்பனையல்ல. நிஜமாகவே அப்படி ஓர் அரண்மனையை நீங்கள் காணலாம். எங்கே? தெற்கு ஜெர்மனியிலுள்ள பவேரியா என்னுமிடத்தில். இரண்டாவது லூத்விக் என்ற அரசரால் கட்டப்பட்டது இந்த அற்புதமான கோட்டை அரண்மனை. லூத்விக் மன்னருக்குப் பைத்தியக்காரர் என்று ஒரு பெயரும் உண்டு.

தமது இருபத்திரண்டு வருஷ ஆட்சியில் விசேஷமான கட்டடக் கலை நுணுக்கங்கள் கொண்ட அதிசயமான அரண்மனைக் கோட்டைகள் மூன்றைக் கட்டினார் இவர். இவற்றில் நியூஷ்வான்ஸ்டைன் கோட்டை (*Newschwanstein castle*) மிகவும் அற்புதமானது.

லூத்விக் யாரையுமே சந்திக்க விருப்பமில்லாத அரசர். அப்படிப்பட்டவர் இந்த நியூஷ்வான்ஸ்டைன் கோட்டை அரண்மனையில் அற்புதமான தர்பார் ஹாலையும் அபூர்வமான சங்கீத மஹாலையும் உருவாக்கியிருக்கிறார். இத்தனை 'ஆர்ப்பாட்டமான தர்பார் மண்டபத்தில் சிங்காதனமே கிடையாது. லூத்விக்கின் காலத்தில் சங்கீத மஹாலில் ஒரு தடவைகூட இசைநிகழ்ச்சி நடைபெற்றதில்லை. தங்கத்தினாலும், தந்தத்தினாலும் ஒரு மகத்தான சிங்காதனத்தை உருவாக்க லூத்விக் திட்டமிட்டிருந்தார். அவருடைய கற்பனைப்படி உருவாக்க அந்தச் சிங்காதனத்துக்கு ஆகக் கூடிய செலவை அறிந்தபோது அரசாங்க நிர்வாகிகள் அதிர்ந்து போனார்கள். கஜானாவையெல்லாம் இம்மாதிரிக் கட்டடங்கள் கட்டியே பைத்தியக்கார அரசன் காலியாக்குவதைக் கண்டு பதைத்தார்கள். மூன்று அரண்மனைகளில் ஒன்றுதான் முற்றுப்பெற்றிருந்தது. இரண்டு பாதியில் இருந்தன. இந்த நிலையில் நான்காவது கோட்டையைக் கட்டவும் மன்னர் திட்டமிடுவதை அறிந்தார்கள். பவேரியா 'பாப்ப'ராவதற்கு முன்னால் லூத்விக்கின் இந்தச் செயல்களைத் தடுத்து நிறுத்த முனைந்தார்கள்.

நியூஷ்வாஸ்ன்டைன் கோட்டையிலிருந்து மன்னரை பெர்கிலுள்ள அவருடைய குழந்தைப் பருவத்து அரண்மனைக்குக் கொண்டு போய்க் காவல் கைதியாக்கினார்கள். அங்கு கொண்டு போகப்பட்ட மூன்றாம் நாள் அவருடைய உடலும் மன்னரின் பிரத்தியேக டாக்டருடைய உடலும் அங்கிருந்த ஏரியில் மிதந்து கொண்டிருந்தன. டாக்டர் கழுத்தை நெரித்துக் கொல்லப்பட்டிருந்தார். மன்னர் லூத்விக் நீரில் மூழ்கி இறந்திருந்தார். லூத்விக் எப்படிப்பட்டவரானாலும் அவர் எழுப்பிய இந்தக் கற்பனைக் கனவு மாளிகை உலக அதிசயங்களுள் ஒன்றாக மதிக்கப்படுகிறது.





சீனிச் சக்கரைக் கட்டி!

வாண்டுமாமா

வெயில் கடுமையாகிக் கொண்டிருந்தது. காலையிலிருந்து அந்தக் காட்டில் அலைந்து அலைந்து அலுத்துவிட்டது ராமுவுக்கு. அவன் தேடி வந்தது கண்ணில் படவில்லை. சோர்ந்து போய் அமர்ந்து கொண்டிருந்தவனின் காதுகளில் தடதடவென்று மரங்கள் முறியும் ஓசை கேட்டது. பூமி அதிர்ந்தது. சட்டென்று துள்ளிக் குதித்து ஒரு புதர் மறைவில் போய் விழுந்தான் ராமு. கானகத்திலேயே பிறந்து வளர்ந்து பழகியவனாயிற்றே. அங்கு உண்டாகும் சிறு ஓசையும் சலனமும் அவனுக்கு அத்துப்படி.

ராமுவின் இமைக்காத விழிகள் சற்றுத் தூரத்தில் மரங்களையும் கிளைகளையும் ஒடித்து மிதித்துத் துவைத்துக் கொண்டு பூதாகாரமாக வரும் அந்தப் பிராணியையே பார்த்துக் கொண்டிருந்தது. மூர்க்கமாக ஒரு பெரிய மரத்தை முட்டித் தள்ளியது அது. இப்போது அதை நன்றாகப் பார்க்க முடிந்தது ராமுவினால். ''சீனி... நம்ம சீனியேதான்!'' என்று அவனை அறியாமலே அவன் வாய் முனகிற்று. எதைத் தேடிக் காலை முதல் அலைந்து கொண்டிருக்கிறானோ அதே யானைதான் அது. சீனி — சீனிச் சக்கரைக் கட்டி என்று அவனால் செல்லமாக அழைக்கப்படும் யானை அது.

காட்டிலாகாவுக்குச் சொந்தமான பழகிய யானைதான் சீனி. கிருஷ்ணன் தம்பி என்ற மாவுத்தனின் பொறுப்பில் உள்ள பல யானைகளில் சீனிக்குத் தனிச் சலுகைகள் உண்டு. ஏனென்றால் அது மாவுத்தனின் ஒரே மகனான ராமுவின் அன்புக்குப் பாத்திரமான யானை. எப்போதும் அதனுடனேயே இருப்பான். சீனியும் ராமுவும் அப்படி அந்நியோந்நியமாக இருப்பதைக் கண்டு எல்லோருமே அதிசயப்பட்டார்கள். அந்தச் சீனியை நான்கு நாட்களாகக் காணவில்லை. வெட்டிப் போட்ட மரங்களை இழுத்து வரச் சென்ற சீனி திரும்பவில்லை. கிருஷ்ணன் தம்பியும் காட்டிலாகா அதிகாரிகளும் கவலை அடைந்தார்கள். சீனியைத் தேடிப் பலர் பல திசைகளிலும் போயிருந்தார்கள். ராமுவும் சீனியைத் தேடி அலைந்து கொண்டிருந்தான் காட்டிலே.

ராமுவின் விழிகள் வியப்பினால் அகலமாகி இருந்தன. அவற்றில் ஒரு பீதியும் கலந்திருந்தது. 'என் சீனியா இது? ஏன் இப்படி முரட்டுத்தனமாக, மூர்க்கமாக மரங்களை ஒடித்துத் துவைக்கிறது? சாதுவான என் சீனியின் கண்களிலே ஏன் ஏதோ ஒரு வெறியூட்டும் ஒளி?' ராமு குழம்பிப் போனான்.

''சீனி... சீனி... இதோ நான் இங்கிருக்கிறேன், உன் ராமு.... வாடா, சீனி! என் சீனிச் சக்கரைக் கட்டி....!'' அன்பு ததும்ப அழைத்தான் ராமு. ஆனால் அந்த வெறி பிடித்த யானை அவனைப் பார்த்ததாகவோ, அவன் குரலைக் கேட்டதாகவோ தெரியவில்லை. முன்னைவிடப் பயங்கரமாகவும் மூர்க்கமாகவும் . மரங்களை ஒடித்து அழித்துக் கொண்டு கானகத்துள் ஓடி மறைந்துவிட்டது.

பாவம் ராமு! 'சீனிக்கு என்ன வந்தது? ஏன் இப்படி....?' என்று கேட்டுக் கொண்டே அப்பாவைக் காண ஓடினான் கிராமத்துக்கு. 'சீனி இப்படி மாறியதற்குக் காரணம் அவருக்குத் தெரிந்திருக்கும்' என்ற நம்பிக்கை அவன் நடையின் வேகத்தை அதிகரித்தது. ''அப்பா...! அப்பா..! நம் சீனியை நான் கண்டுபிடித்துவிட்டேன்,

ஆனால் அது ஒரே கோபமா, பயங்கரமாகப் பிளிறிக்கிட்டு என்னைக் கண்டும் காணாதது போலக் காட்டுக்குள்ளே ஓடிவிட்டது'' என்றான் ராமு. ஓடி வந்ததில் அவனுக்கு மூச்சுத் திணறியது.

''கோபமாகவா? உன்னைப் பார்த்தும் அது கிட்ட வரல்லியா?'' என்று கேட்டான் கிருஷ்ணன் தம்பி.

ராமு தான் கண்டதை அப்படியே விவரித்தான். அவன் சொல்லச் சொல்ல அவர் முகம் வெளுத்தது. ஒரு பெருமூச்சுடன், ''சீனிக்கு மதம் பிடித்துவிட்டது. நான் உடனே இதை ஆபீசர்கிட்டே சொல்லிவிடவேண்டியதுதான்'' என்றவன், ''நீ சொல்றபடி இருந்தா அதைச் சுட்டுக் கொல்ல வேண்டி இருக்கும்'' என்று கூறினான்.

''கொல்லவா? என் சீனியையா சுட்டுக் கொல்லப் போறீங்க?'' கத்திவிட்டான் ராமு. ''ஏனப்பா அப்படி?''

''யானைக்கு மதம் பிடிச்சுட்டா அதனாலே ரொம்பக் கஷ்டம் ராமு. அது இனிமே நமக்கு அடங்காது. எதையும் அழித்து நாசமாக்கும். அதை உயிரோட விட்டிருக்க முடியாது.''


''அப்பா! அப்படின்னு நீங்க ஆபீசர்கிட்ட எதுவும் சொல்லாதீங்க. என் சீனி நீங்க நினைக்கிறபடி அப்படி ஏதும் மோசமாய் நடக்காது. என் சீனி எத்தனை சாது தெரியுமா?'' என்றபோது ராமுவின் கண்களிலிருந்து கண்ணீர் உருண்டது.

''ராமு நீ அதுக்கிட்ட வெச்சிருக்கிற அன்பைப் பத்தி எனக்குத் தெரியாதா? ஆனா சீனிக்கு மதம் பிடிச்சுட்டுது. இதை ஆபீசருக்கு நான் தெரியப்படுத்தியாகணும். அது என் கடமை'' என்றான் மாவுத்தன் கிருஷ்ணன் தம்பி.

ஆபீசரிடம் தகவல் அறிவிக்கப்பட்டது. அவருக்குமே அந்தச் செய்தி வியப்பாக இருந்தது. ''சீனியா? சீனிக்கா மதம் பிடிச்சுட்டுது? ஏதோ ஒரு முரட்டுக் காட்டு யானை கிராமங்களில் புகுந்து ரொம்பத் தொந்தரவு தருவதாகப் புகார்கள் வந்திருக்கு. ஆனால் உயிர்ச்சேதம் ஏதுமில்லை. அது நம்ம ரேஞ்சிலே பழகின சீனின்னு நான் நினைக்கவே இல்லை... ம்... நாளைக் காலையிலே அதைக் கவனிப்போம்'' என்றார் காட்டிலாகா அதிகாரி.

அப்பா சொன்னது போலவே அந்த அதிகாரியும் அதைச் சுட்டுக் கொல்ல நாளைக் காலையிலே கிளம்பப் போகிறார் என்று அறிந்தபோது ராமுவினால் அழுகையைக் கட்டுப்படுத்தவே முடியவில்லை. சீனி, சீனி என்று அவன் உள்ளம் புலம்பியது. அன்று முழுவதும் அவன் சாப்பிடவே இல்லை. பட்டினியாகவே படுத்திருந்தான். அவனுக்குத் தூக்கமும் வரவில்லை. மதம் பிடித்த யானைகளைப் பற்றி அவன் அப்பா எத்தனையோ சொல்லியிருக்கிறார். அவையெல்லாம் அவன் மனக் கண் முன் வந்தன. 'ஆனால்.. ஆனால் என் சீனிக்கு மதம் பிடிக்கவில்லை. அது எதனாலோ அப்படிக் கோபமடைந்து ஓடியிருக்கிறது. எதனால்...? ஏன்?' இதையே திருப்பித் திருப்பிக் கேட்டுக் கொண்டான் ராமு. சட்டென்று ஒரு முடிவுடன் எழுந்து உட்கார்ந்தான். ''என் சீனி! அதற்கு மதம் பிடித்தாலும் சரி அதை என்னால் இழக்க முடியாது. எப்படியும் அதை மறுபடியும் சந்திப்பேன்'' என்று ஓசைப் படாமல் வீட்டை விட்டு வெளியே வந்தான்.

கானகம் ஆழ்ந்து உறங்கிக்கொண்டிருந்தது. 'கொர்...கொர்...' என்ற தவளைகளின் ஓசையும், சற்றைக்கொரு தடவை 'கூ....கூ' என்று ஓலமிட்டுப் பறக்கும் ஆந்தையின் குரலும் தவிர எங்கும் ஒளியுமில்லை, வேறு ஒலியுமில்லை. ராமுவுக்கு அந்த இருட்டிலும் பாதை தெரியும். சீனியை எங்கு போனால் காணலாம் என்பதும் தெரியும். உறுதி



யோடு நடையை எட்டிப் போட்டான். குறிப்பிட்ட இடத்துக்கு வந்ததும் ஒரு மரத்தின் மீதேறிக் காத்திருந்தான். வெகு நேரம் காத்திருக்கவில்லை. சீனி அவன் பார்வையில் படுமுன்பாக அது வருவதை உணர்ந்து கொண்டான் ராமு. முதல் நாள் பார்த்தபோதிருந்த அதே கோபம், மூர்க்காவேசம். ராமு சட்டென்று தான் ஏறியிருந்த மரத்தின் உச்சிக்குப் போனான். அவன் நெஞ்சு தடதடவென்று அடித்துக் கொண்டது. சீனியின் செய்கை அவனுக்குப் பயத்தைக் கொடுத்தது. ஆனால் தன் நண்பனை எப்படியும் காப்பாற்றியாக வேண்டும் என்ற உறுதியோடிருந்தான்.

''சீனி, என் அருமைச் சீனி. இதோ பார் உன் தோழன் ராமுவைத் தெரியவில்லையா உனக்கு? மறந்து விட்டாயா? சீனி, முரட்டுத்தனமாக இப்படியெல்லாம் நடந்து கொள்ளாதே. அப்புறம் உன்னைச் சுட்டுக் கொன்று விடுவார்கள்.'' உருக்கமாக உரிமையோடு கெஞ்சினான், கொஞ்சினான் ராமு. சீனி ஒரு நிமிஷம் நிமிர்ந்து நிதானித்து அவனைப் பார்த்தது. ராமுவுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. ஆனால் அடுத்த விநாடி சீனி தன் துதிக்கையை உயர்த்தியது. காற்றை முகர்ந்து மூர்க்கமாகச் சுழற்றியது. பயங்கரமாகப் பிளிறியபடி ராமு ஏறியிருந்த மரத்தை நோக்கி ஆவேசமாகக் காடே கிடுகிடுக்க ஓடி வந்தது.

அதன் செயல் ராமுவின் உடலில் குப்பென்று வியர்வையை வழியச் செய்தது. நடுங்கிப் போனான் ராமு. தாழ்த்திய தலையோடு தானுள்ள மரத்தை நோக்கி வந்து கொண்டிருந்த யானை மீது, அதன் காதருகே அவன் பார்வை சென்றது. 'அங்கே.... அதென்ன, அத்தனை பெரிய காயம்? ஐயோ! என் சீனியை யாரோ சுட்டிருக்கிறார்கள். குண்டு பாய்ந்து குருதி வழிந்து ரணகளமாகியிருக்கிறதே... சீனி, என் அருமைச் சீனிக் கட்டி, உன்னை இப்படி யார் காயப் படுத்தினார்கள்?' ராமுவின் மனம் அழுதது. அதே வேளையில் துப்பாக்கிக் குண்டின் ஒலியும் அதிர்ந்தது. ஆனால் குறி தவறி வீணாகியது அந்தக் குண்டு. தூரத்தில் இரண்டு பேர் துப்பாக்கிகளை உயர்த்தி மறுபடியும் சீனியைச் சுடத் தயாராவதைக் கண்டான் ராமு. அவர்களில் ஒருவர் காட்டிலாகா அதிகாரி. ராமு ஏதாவது செய்து தடுக்கா விட்டால் அவர்களுடைய அந்தக் குறி நிச்சயம் சீனியின் உயிரைக் குடித்து விடும்.

ராமுவின் உடலில் ஒரு வெறி ஏற்பட்டது. மரத்தின் மீதிருந்தவாறே உரக்கக் கத்தினான். ''சுடாதீர்கள்... சுடாதீர்கள்...! சீனி படுகாயம் அடைந்திருக்கிறது. அதற்கு மதம் பிடிக்கவில்லை. சுடாதீர்கள்... சுடாதீர்கள்!''

காட்டிலாகா அதிகாரி ராமுவின் உச்ச குரலை உற்றுக் கேட்டார். வன விலங்குகளின் நல்வாழ்வுக்கும் பொறுப்பானவராயிற்றே அவர். சட்டென்று துப்பாக்கியைத் தாழ்த்தினார். அவரிடம் எப்போதுமே ஒரு கைத்துப்பாக்கி இருக்கும். அதனால் சுட்டால் பிராணிகளின் உயிர் போகாது. அதிலிருந்து வெளிப்படும் ஒருவகைக் குண்டு; அது தாக்கும் பிராணிகளின் உடலில் மயக்க மருந்தைச் செலுத்தி அதை நினைவிழக்கச் செய்யும். நோயுற்ற காட்டு விலங்குகளின் அருகே சென்று ஊசி போட முடியுமா? அதற்காக இப்படியோர் அமைப்பு உண்டு. அந்த மயக்க மருந்து குண்டை இப்போது இரண்டுமடங்காகச் சீனியின் உடலில் பாய்ச்சிச் சுட்டார். சில விநாடிகளில் சீனி தள்ளாடியபடி கீழே சாய்ந்தது.

ஓடோடி வந்தனர் காட்டிலாகா அதிகாரியும் மாவுத்தன் கிருஷ்ணன் தம்பியும். ராமுவும் மரத்திலிருந்து இறங்கி ஓடி வந்தான். யானையின் காதருகில் குண்டு பதிந்து ரத்தம் வழிந்துகொண்டிருப்பதைக் கண்டார்கள். அதிகாரி குண்டை லாகவமாக வெளியேற்றி மருந்து வைத்துக் கட்டினார்.

''யானைத் தந்தங்களைக் கடத்தும் கொலைகாரக் கூட்டத்தினர் யாரோ இதைச் சுட்டிருக்கிறார்கள். அதனால் ஏற்பட்ட வலியினால்தான் இது வெறி கொண்டிருக்கிறது'' என்று விளக்கினார் அதிகாரி. கண்ணீர் வழிய நின்றுகொண்டிருக்கும் ராமுவைக் கண்டதும் ''கவலைப்படாதே! இன்னும் ஒரு மணியில் உன் தோழனுக்கு நினைவு திரும்பி விடும். அதன் பிறகு அது பழைய பழைய யானையாகவே இருக்கும்'' என்று அவன் முதுகில் தட்டிக்கொடுத்தார் அதிகாரி.

இரண்டு மணி நேரம் ராமு கவலையோடு அதன் அருகிலேயே அமர்ந்திருந்தான். கண் விழித்த சீனி, தன் துதிக்கையால் ராமுவின் முகத்தை அன்போடு வருடியது. அதன் காயத்தில் இப்போது வலி இல்லை என்பதை உணர்ந்து கொண்ட ராமு வாஞ்சையோடு அதன் துதிக்கையைக் கட்டிக் கொண்டான். சாந்தமாக, சாதுவாக, எழுந்தது சீனி. தன் துதிக்கையைச் சீனி சுருட்டிக்கொள்ள அதில் ஏறி அமர்ந்து கொண்டான் ராமு. தேக்கு மரங்களை இழுத்துத்தள்ளும் பகுதிக்கு அமைதியாக நடந்தது சீனிச் சக்கரைக் கட்டி!



மாப்பிள்ளை எங்கே?

கப்பா னுக்குத் திருமணம்
கண்டெ லிகளின் ஊர்வலம்
பக்க மேளம் தவளையார்
பாண்டு வாத்தியம் முழக்குறார்

ஆந்தை யாரின் கச்சேரி
ஆமை யாரின் நாட்டியம்
ஓந்தி தலையை ஆட்டுது!
உடலின் வண்ணம் மாற்றுது!

ஜிலேபி லட்டு ஐஸ்கிரீம்
ஜுஜுஜி மெங்குது விருந்திலே!
வெளுத்துக் கட்டி வாங்குறார்
விருந்தி னர்கள் யாவரும்!

தாலி கட்டும் நேரமே!
நாலு பக்கம் பார்க்கிறார்!
வேலி யோரம் ஓட்டுறார்!
வெள்ளி மூக்கை நீட்டுறார்!

வீடு முழுதும் தேடுறார்!
வெளியில் ஓடித் தேடுறார்!
காடு முழுதும் தேடுறார்!
காண வில்லை மாப்பிள்ளை!

அடுக்கி வைத்த பட்சணம்
அளவில் லாமல் தின்றதால்
வெடித்து வயிறு துடித்து உள்ளே
விழுந்து கிடந்தார் மாப்பிள்ளை!

குட்டிப் பாப்பா!

என்னைப் போலோர் குட்டிப் பாப்பா
இங்கே பாரம்மா! — அவன்
கண்ணை முழிச்சுப் பார்க்கி றானே
கவனிப் பாயம்மா!

அடிக்கக் கையை ஓங்கினாலோ
அடிக்க வருகிறான் — மிக்க
அன்பாய் முத்தம் கொடுக்கப் போனால்
அவனும் தருகிறான்!

சிரிக்கும் போது அவனும் சிரித்து
மகிழ்ந்து போகிறான் — நான்
தின்னும் 'சாக்லேட்' அவனும் வாயில்
குதப்பிக் காட்டுறான்!

எங்கிருந்து வந்தான் இவன்
தெரிய வில்லையே — இரவில்
எங்கு படுத்துத் தூங்கப் போவான்
புரிய வில்லையே!

"சக்திக்கனல்"




செல்லு கண்மணி


மெல்ல மெல்ல நடந்து பள்ளி
செல்லு கண்மணி — படிப்பில்
நல்ல மார்க்கு வாங்கி வரச்
செல்லு கண்மணி.

கல்முள் பார்த்துப் பத்திரமாய்ச்
செல்லு கண்மணி — பிஞ்சுக்
காலில் சின்னச் செருப்ப ணிந்து
செல்லு கண்மணி.

கூர்முன் லாடம் தகரம் பார்த்துச்
செல்லு கண்மணி — நல்ல
கூர்மதி பெற வேண்டு மென்று
எண்ணு கண்மணி.



மனநிறைவு



ஜி.ரங்கநாதன்

அன்று விநாயக சதுர்த்தி. ராமு ஒரு வாரமாகவே, அதை எப்படிக் கொண்டாட வேண்டும் என்று கற்பனை செய்து கொண்டிருந்தான். பெரிய பிள்ளையார் ஒன்று வாங்கி அதற்கு நிறைய வெல்லக் கொழுக்கட்டை, உப்புக் கொழுக்கட்டை, எள்ளுக் கொழுக்கட்டை இவற்றை நைவேத்தியம் செய்ய வேண்டும், பிள்ளையார் தலைமேல் அழகாகக் குடை ஒன்றை வைக்க வேண்டும், சந்தனக் காப்பு சாற்ற வேண்டும். அன்று நன்றாக வழிபட வேண்டும் என்று எண்ணி இருந்தான். அவனுக்குப் பிள்ளையாரப்பரிடம் பக்தி அதிகம்.

எனவே தன் தந்தையைப் பார்த்து 'அப்பா, ஐந்து ரூபாய் கொடுங்கள், பிள்ளையார், பிரப்பம் பழம், நாவற்பழம், கொய்யாப் பழம், பூ எல்லாம் வாங்க வேண்டும்' என்று கேட்டான். ஆனால் அவன் அப்பாவோ ஓர் ஏழைக் குமாஸ்தா. இவற்றை வாங்குவதற்கு அவரால் ஐந்து ரூபாய் செலவு செய்ய எப்படி இயலும்? விலைவாசி கட்டுப்பாடாக இருந்த காலத்திலேயே, 'தஇங்கிணத்தோம்' போட்டுக் கொண்டிருந்தார். ஆலகால விஷம் போல் விலைவாசி ஏறியுள்ள இந்நாளில் அவரது வறுமைக்குக் குசேலரைத்தான் எடுத்துக்காட்டாகக் கூற முடியும்!

தன் மகன் ராமு ஆவலுடன் கேட்டவுடன் அவருக்கும் மனம் நெகிழத்தான் செய்தது. இருந்தாலும் என்ன செய்ய முடியும்? ராமுவைப் பார்த்து, ''இல்லைடா ராமு, ஐந்து ரூபாய் இருந்தால் இரண்டு நாள் அரிசிக்குக் கவலைப்பட வேண்டாமே. ஏதோ நம்மால் முடிந்ததை இன்று சுருக்கமாகச் செய்வோம். பிள்ளையார் நமது பக்தியைத் தானே விரும்புகிறார்? இந்தத் தடவை சொற்பமாகச் செய்தாலும், அடுத்த தடவை அவர் நமக்கு நல்ல வழிவிடுவார்'' என்று கூறினார்.

''ஆமாண்டா, ஏழைக்குத் தகுந்தது எள்ளுருண்டைதானே? ஏதோ நம்மால் முடிந்ததைச் சிரத்தையுடன் செய்தால், கடவுள் ஏற்றுக் கொள்ளாமலா போய் விடுவார்?'' என்று அம்மாவும் ஆமோதித்தாள்.

பற்றிக் கொண்டு வந்தது ராமுவுக்கு. அவனுடைய கனவுகள் எல்லாம் சரிந்துவிட்டன அல்லவா? 'சே, நாம் ஏன் இந்தத் தரித்திரக் குடும்பத்தில் வந்து பிறந்தோம்?' என்று தன்னையே நொந்து கொண்டான். ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. ஆனால் அப்பா அம்மாவுடன் சண்டை போட முடியுமா? மௌனமாக வீட்டை விட்டு வெளியே போனான். கடை வீதி கோலாகலமாக இருந்தது. மூலைக்கு மூலை அம்பாரமாக மண்ணைக் குவித்துக் கொண்டு வித விதமான அச்சில் பிள்ளையார்களைச் செய்து குவித்துக் கொண்டிருந்தார்கள். பழங்களும், பூக்களும் வண்ண வணக் குடைகளும் அப்பப்பா! இந்த வைபோகங்களையெல்லாம் நம் வீட்டுப் பிள்ளையாருக்குச் செய்ய முடியவில்லையே என்ற ஏக்கத்துடன் வீட்டுக்குத் திரும்பினான். அங்கு அவன் அம்மா பிள்ளையார் பூஜைக்கு வேண்டிய ஏற்பாடுகளில் மூழ்கி யிருந்தாள்.

வீட்டில் பைசாகூட இல்லாததால் அம்மா ஏதோ இருந்த அரிசியில் சிறிதளவு குத்தி அவலாக்கினாள்; கொஞ்சம் இட்லி செய்தாள். தோட்டத்தில் பூத்த செம்பரத்தை, சங்கு போன்ற மலர்களைக் கொண்டு மாலை சூட்டினாள். வீட்டிலிருந்த களி மண்ணையே குழைத்துத் துதிக்கை, கை, கால் செய்து பிள்ளையாரை உருவாக்கினாள். கண்ணுக்குக் குந்துமணி பதித்தாள். பூஜை முடிந்ததும் ராமுவின் அம்மா இட்லி, அவல் பிரசாதத்தை ராமுவுக்கும், அவன் அப்பாவுக்கும் இலையில் போட்டாள். இவ்வளவுதான் அவர்கள் விநாயக சதுர்த்தி. எளிமையாக இருந்

தாலும் இதயபூர்வமான பூஜை. ஆனால் ராமுவுக்கு இது தெரியவில்லை. மனக் குறைதான் ராமுவுக்கு.

அன்று மாலை ராமுவும், அவன் நண்பன் சோமுவும் விளையாடச் சென்றிருந்தனர். அப்போது சோமு முகவாட்டத்துடன் இருந்தான். ராமு சோமுவைப் பார்த்து, ''ஏண்டா, மிகவும் வருத்தத்துடன் இருக்கிறாய் ?'' என்று கேட்டான். உடனே சோமு, தன் முகத் தோற்றத்தை மாற்றிக் கொண்டு, 'அது சரி, உங்கள் வீட்டில் விநாயக சதுர்த்தி கொண்டாடினாயா?'' என்று கேட்டான் ராமுவை.

''ஆமாம், கொண்டாடினோம். ஏழை வீட்டில் இது ஒன்றுதான் குறைச்சல்'' என்றான் ராமு எரிச்சலுடன்.

''என்னடா ராமு, பெரிய பெரிய பேச்செல்லாம் பேசுகிறாயே?'' என்று கேட்டான் சோமு.


''பின்னே என்ன? பிள்ளையார் வாங்கக் கையில் காசில்லை என்று அப்பா சொல்லி விட்டார். எனவே, மிகவும் சுருக்கமாகப் பேருக்கென்று கொண்டாடி விட்டோம். ஏன் சோமு, உலகத்தில் வறுமை என்ற ஒன்றை ஆண்டவன் ஏன்தான் படைத்தாரோ ?'' என்று மனக் கசப்புடன் கூறினான்.

சோமு அதற்கு, ''ராமு! உன்னைப் பார்த்து நான் பொறாமைப்படுகிறேன். உங்கள் வீட்டில் விநாயகச் சதுர்த்தியைச் சுருக்கமாகவாவது கொண்டாடினார்களே, எங்கள் வீட்டில் அதுகூடச் செய்யவில்லை'' என்றான்.

திடுக்கிட்ட ராமு, கண் கலங்கிய சோமுவைப் பார்த்து, ''ஏண்டா, என்னடா இப்படிச் சொல்லுகிறாய்? எங்களுக்குத்தான் பணம் இல்லை. உன் அப்பாதான் பணக்காரர் ஆயிற்றே, ஏன் விநாயக சதுர்த்தி கொண்டாடவில்லை? சும்மா ஜமாய்த்திருக்கலாமே ?'' என்று கேட்டான்.

''பணம் இருந்தால் என்ன? மனம் வேண்டாமா? எங்கள் அப்பாவுக்குக் கடவுள் நம்பிக்கையே கிடையாது. எனவே நானும் எங்க அம்மாவும் எவ்வளவு கெஞ்சிக் கேட்டாலும் இதற்கெல்லாம் அவர் ஒத்துக் கொள்வதில்லை. 'வேண்டுமானால் கொழுக்கட்டைகள் செய். ஆனால் அதை ஏதோ மண் பொம்மைக்குப் படைப்பதை நான் அனுமதிக்கமாட்டேன்' என்று கூறி விட்டார். எங்கள் வீட்டில் பண்டிகை எதுவுமே கொண்டாடுவதில்லை'' என்று கூறினான். அவன் மனத்துள் தேங்கிக் கிடந்த ஏக்கம் கண்ணீராய்ப் பெருக்கெடுத்தது.

ராமுவின் கண்கள் பனித்தன. ''சோமு! இனி எந்தப் பண்டிகையானாலும் நீ என் வீட்டுக்கு வந்துவிடு. இப்போதே வா!'' என்று அவன் கையைப் பற்றி வீட்டுக்கு அழைத்துச் சென்றான். தன் வீட்டில் இருந்த பிள்ளையாரைச் சோமுவுக்குக் காண்பித்தான். பிறகு அவனுக்குத் தன் அம்மா செய்த எளிய பிரசாதங்களைக் கொடுத்து மகிழ்ந்தான். சோமு விடைபெற்றுக் கொண்டு போன பிறகு ராமுவுக்கு, 'ஏழையானாலும் பணக்காரனானாலும் கடவுளை வழிபடக் கொடுத்து வைத்திருக்க வேண்டும்' என்று அவன் மனத்தில் தோன்றியது. அவன் கண் முன் வறுமை ஒரு தூசாகவும், தனது தாய் தந்தையர் தெய்வமாகவும் பட்டனர். காலையில், 'இந்த வீட்டில் ஏன் பிறந்தோம்?' என்று தன்னை நொந்து கொண்ட அவன் இப்போது 'இந்த வீட்டிலேயே சோமுவும் ஏன் பிறக்கவில்லை ?' என்று பிள்ளையாரைக் கேட்டுக் கொண்டிருந்தான்.



அப்பெண்டிக்ஸ் என்றால் என்ன?

பெருங் குடலின் ஆரம்பத்தில் சிறு குடலின் முடிவில் அடிவயிற்றின் வலது பக்கத்தில் இருக்கும் எவ்விதப் பிரயோசனமுமில்லாத ஓர் உறுப்புக்கு அப்பெண்டிக்ஸ் என்று பெயர். உடலின் ஓர் உறுப்பான இது இல்லாமலும் நம்மால் சுகமாக வாழ முடியும். அது ஆரோக்கியமாக இருந்தாலும் கூட அதனால் நமக்கு எவ்விதமான பயனும் கிடையாது. ஆறு அங்குல நீளமுள்ள ஒரு குழாய்தான் அப்பெண்டிக்ஸ். குடல் சுவர்களின் அமைப்பு எப்படியோ அதே போன்றதுதான் இதன் அமைப்பும். இந்தச் சுவரின் உள் அடுக்கில் சளி போன்றதொரு வழுவழுப்பான பொருள் இருக்கிறது. இதன் அடியில் லிம்ஃபாய்டு திசுக்கள் உள்ளன. இந்தத் திசுக்களில்தான் சில வேளைகளில் கோளாறுகள் ஏற்படுகின்றன. உடலில் நோய்க்குறிகள் ஏற்படும் போது அந்தத் திசுக்களில் வீக்கம் உண்டாகிறது. குடலுக்கு வரும் பொருள்கள் அப்பெண்டிக்ஸுக்குள் புகுவதற்கு இடமுண்டு. ஆனால் சுலபத்தில் வெளியேற வழியில்லை. கெட்டியாகிவிடும். இந்தத் திசுக்கள் வீங்கும்போது அப்பெண்டிக்ஸ் குழாயும் கெட்டியாகி விடும். அப்பெண்டிக்ஸிலுள்ள ரத்தக் குழாய் வீங்கிய திசுக்களாலும், கெட்டியான பொருள்களாலும் சுலபமாக நசுக்கப்படுகிறது. இதனால் ரத்த ஓட்டம் அங்கு தடைப்படத் தொற்றுநோய்க்கு இடமுண்டாகிறது. அப்பெண்டிக்ஸ் வீக்கத்துக்கு அப்பெண்டிஸிடிஸ் என்று பெயர். அநேகமாக எல்லாருக்குமே இந்த அப்பெண்டிஸிடிஸ் நோய் சகஜமாக வரக் கூடும். இதன் அறிகுறி வலி, வயிற்றின் வலது பக்கத்தில் ஏற்படும் இசிவு. சிலவேளைகளில் முதலில் வலி தொப்புளில் தோன்றிப் பிறகு வலப் பக்கத்தில் நிலைகொள்ளும்.

குழந்தைகளுக்கு அப்பெண்டிஸிடிஸின் அறிகுறிகள் — முதலில் அழுகை பிறகு வாந்தி, சாப்பிட மறுத்தல் ஆகியவை.

மிகக் கடுமையான அப்பெண்டிஸிடிஸுக்கு உடனே ரண சிகிச்சை மூலம் அதை அகற்றிவிடுவதுதான் விவேகமான செயல். இது மிக மிக எளிய முறை. சுலபமாகச் செய்துவிடலாம்.



மச்சம் என்றால் என்ன?

சிலருக்குப் பிறக்கும்போதேயும் சிலருக்குப் பிறந்து கொஞ்ச நாட்களிலும் மச்சம் எனப்படும் அடையாளங்கள் உடலில் தோன்றும். மருத்துவத் துறையில் இன்றளவும் இத்தகைய மச்சங்கள் தோன்றுவதற்கான காரணத்தையோ அது தோன்றாமல் தடுப்பதற்கான வழிவகைகளையோ கண்டு பிடிக்கவில்லை. குழந்தை கருவில் இருக்கும்போது தாய்க்கு ஏற்படும் அதிர்ச்சி பயம் இவைகள்தான் மச்சம் உண்டாவதற்குக் காரணம் என்று ஒரு நம்பிக்கை. இது தவறானது.

அநேகமாக ஒவ்வொருவருடைய உடலிலும் எங்காவது ஓரிடத்தில் ஒரு மச்சமாவது இருக்கும். மச்சங்கள் அது இருக்கும் இடத்தின் தோலின் தன்மையைப் பொறுத்து அதன் நிறமும் அளவும் மாறுபட்டுக் காணப்படும். உடலில் உள்ள தோல் பகுதியில் எந்த இடத்திலும் இது தோன்றலாம், உச்சந்தலையிலும் கூட. சிலருக்கு இத்தகைய மச்சங்கள் உடலில் முன்பே தோன்றி இருந்தாலும் பதினாறு பதினைந்து வயதுக்கு மேல்தான் நன்றாகத் தெரியும். இதைப் பெரிதாக நினைக்காமல், கவனம் செலுத்தாமல் இருப்பதே நல்லது. தேக ஆரோக்கியத்துக்கு இதனால் எவ்விதக் கெடுதலும் கிடையாது. ஆயிரத்தில் ஒன்று — ஏன் அதையும் விடக் குறைவாக — இத்தகைய மச்சங்கள் புற்று நோய்க் கோளாறாக மாறக் கூடிய சாத்தியக் கூறுகளைக் கொண்டிருக்கும். இத்தகைய நிலை மிக மிகக் குறைவு. இதைப் பற்றிப் பயப்படத் தேவையில்லை.

தோலில் வேறு வகையான கோளாறுகள் பல உண்டு. இதையுமே கூட (பர்த் மார்க்ஸ்) மச்சம் என்று கருதப்படுகிறது. சிலருக்குத் தோலின் மீது சிவப்பாக, இளஞ் சிவப்பாக, பெரிய அளவில் சில அமைப்புகள் இருக்கும். இவையும் பிறக்கும்போதேயோ அல்லது பிறந்து கொஞ்ச காலத்துக்குப் பிறகேயோ தோன்றும், மாறுபட்ட நிறங்களில் காணப்படும் இவ்வகைப் பெரிய மச்சங்கள். தோன்றியதைப் போலவே தானாகவே சிகிச்சை ஏதுமின்றி இவை மறைந்துவிடும். ஆனால் டாக்டர்கள் இவ்வகை வண்ணக் கறை போன்ற பெரிய மச்சங்களை ஆரம்பத்திலேயே அகற்றி விட்டால் உடல் அழகு கெடுவதிலிருந்து தப்பலாம் என்கிறார்கள்.




தொல்பொருள் ஆராய்ச்சி

புதைபொருள் அல்லது தொல் பொருள் ஆராய்ச்சிக்கு ஆங்கிலத்தில் ஆர்க்கியாலஜி என்று பெயர். நெடுங் காலத்துக்கு முன்னால் வாழ்ந்த மக்களைப் பற்றிய விவரங்களை ஆராய்பவர்களுக்குத் தொல் பொருள் ஆய்வாளர் என்று பெயர். இந்த ஆராய்ச்சியில் இரண்டு வகை உண்டு. முதல் வகை பழங்குடியினர் வாழ்ந்த இடங்களைத் தோண்டிப் பார்த்தல். இந்தக் காரியத்தை மிக்க கவனமாகவும் நிதானமாகவும் செய்ய வேண்டும். இரண்டாவது அகழ்ந்து கண்டதை எல்லாம் ஆராய்தல். அகழ்ந்தெடுத்த பொருள்களின் விவரங்களை விளக்கமாகக் குறிப்பெடுத்து வைத்தல். இவ்விரு வேலைகளும் முடிந்ததும் ஆர்க்கியாலஜிஸ்ட் அங்கு வசித்த மக்களின் வாழ்க்கை முறையைப் பற்றிய ஆராய்ச்சிக் குறிப்பைத் தயாரிப்பார்.

தொல்பொருள் ஆய்வாளர்கள் எழுதும் பண்டைய மனிதர்களின் கதை பூரணமானது என்று கூற முடியாது. பண்டைய மனிதர்கள் விட்டுச் சென்ற ஒரு சில பொருள்களைக் கொண்டு அவர்கள் இப்படி இப்படி வாழ்ந்திருக்கலாம் என்ற ஊகம்தான் இவை. அகழ்ந்து பார்க்கும்போது கிடைப்பவை புராதன மக்கள் அன்றாடம் உபயோகித்த பொருள்கள், ஆயுதங்கள், உண்கலன், பொம்மைகள் இப்படிப்பட்டவைதான்.

நமக்கு முன்னால் இருந்தவர்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்பதை அறிந்து கொள்ளும் ஆர்வம் ஏற்பட்டபோது புதைபொருள் ஆராய்ச்சி பிறந்தது.

கி. பி. 1500ல் இத்தாலி, கிரீஸ் ஆகிய நாடுகளுக்குச் சென்ற யாத்திரீகர்கள் அங்கிருந்த புராதனச் சின்னங்களைக் கண்டபோது அவைகளைப் பற்றி ஆராய வேண்டும் என்ற ஆர்வம் தோன்றியது. இத்தாலியர்கள் புராதன இடிபாடுகளைத் தோண்டலானார்கள். மேலும், மேலும் பலர் கடந்த காலத்தைப் பற்றி அறிந்து கொள்ளச் சரித்திர முக்கியத்துவம் உள்ள இடங்களைத் தோண்டிப் பார்க்கலானார்கள். இப்படியே புதைபொருள் ஆராய்ச்சி கொஞ்சம் கொஞ்சமாக வளரலாயிற்று.




ஆம்ஃபிபியம் என்றால் என்ன?

நீரிலும் நிலத்திலும் வாழக்கூடிய ஜீவராசிகளுக்கு ஆங்கிலத்தில் ஆம்ஃபிபியன்ஸ் என்று பெயர். இது கிரேக்க மொழியிலிருந்து வந்த வார்த்தை. இவ்வகை ஜீவராசிகளில் பெரும்பாலானவை தங்கள் இளமை வாழ்வை நீரிலும் பிற்பகுதியை நிலத்திலும் கழிக்கக் கூடியவை. ஆம்ஃபிபியன்களில் மூன்று பிரிவு—இனங்களுண்டு. தவளை, தேரை, ஸாலமாண்டர்கள், காஸலியன்கள் ஆகியவை. ஸாலமாண்டர் என்பது பல்லி போன்ற ஒருவகைப் பிராணி. காஸலியன்கள் என்பவை பூமியில் குழி தோண்டும் சுபாவமுடையவை. இவற்றுக்குக் காலும் வாலும் கண்ணும் கிடையா.

ஆம்ஃபிபியன்களில் 1040க்கும் அதிகமான வகைகள் இருக்கின்றன. இவை இத்தனையும் மூன்றடிக்கும் குறைவான நீளமுடையவை — ஜப்பானில் வாழும் ஒருவகை ராட்சத ஸாலமாண்டரைத் தவிர. இது ஐந்தடி நீளம் வரை வளரக் கூடிய பல்லி. ஆம்ஃபிபியன்கள் எல்லாமே பலம் பொருந்திய ஜீவன்கள் அல்ல. தவளையைத் தவிர மற்றவை வேகமாக இயங்கக் கூடியவையுமல்ல. இவற்றில் பெரும்பாலானவை, ஒதுங்கி ஒளிந்து வாழும் குணத்தினாலும் அவைகளின் நிறத்தினாலுமே பாதுகாப்புடன் வாழுகின்றன. இவை தவிர எல்லா ஆம்ஃபிபியன்களின் தோல்களிலும் ஒருவகை விஷ நீர்ச் சுரப்பி உண்டு. இது இவற்றின் விரோதிகளிடமிருந்து காப்பாற்றுகிறது. முதிர்ந்த நிலையில் எல்லா ஆம்ஃபிபியன்களும் சுவாச கோசங்களினாலேயே சுவாசித்தாலும் கூட இவைகளால் தோலினாலும் சுவாசிக்க முடியும். ஆம்ஃபிபியன்கள் உஷ்ணப் பிரதேசங்களில்தான் காணப்படும். பொதுவாக உப்பு நீரில் இவை வாழ்வதில்லை. நன்கு வளர்ந்த இவை அநேகமாகப் பூமியிலேதான் வசிக்கும். இனப் பெருக்கத்தின் போது மட்டுமே நீர் நிலைகளுக்குப் போகும். தண்ணீரில் நூற்றுக்கணக்கான முட்டைகளை இடும். இவை பசை போன்ற ஒரு வகைப் பொருளால் ஒன்றோடொன்று இணைந்திருக்கும். இத்தகைய முட்டைகளைத் தாய் பிறகு பாதுகாப்பதற்கு எவ்விதப் பிரயாசையும் மேற்கொள்ளாது. அங்கு முட்டை பொரிந்து குஞ்சுகள் வெளிப்பட்டு மீன்களைப் போல லார்வாக்கள் வாழும். இந்த நிலையில் இவற்றின் ஆகாரம் நீர்த்தாவரங்கள்தான்.







வானத்தை வெற்றி கொண்ட மனிதர்கள்!

ஆடையின்றிக் காடு மலைகளில் அலைந்த மனிதன்- உண்ண உணவும் உடுக்கத் துணியும் இருக்க வீடும் ஏற்படுத்திக் கொண்டு நாகரிகமாக வாழ ஆரம்பித்த நாளிலிருந்து ஆகாயத்திலே பறக்கும் பறவைகளைக் கண்டு வியந்தான். 'நானும் அவைகளைப் போலப் பறக்க முடியுமானால் எப்படி இருக்கும்?' என்று ஏங்கலானான். அந்த ஏக்கம் அவனிடம் புதிய ஊக்கத்தை ஏற்படுத்தியது. பறக்க வேண்டும், விண்ணையும் வெற்றி கொள்ள வேண்டும் என்ற வேட்கை மிகக் கொண்டான் மனிதன். பறவைகளைப் போல் தானும் செயற்கையான இறக்கைகளைக் கட்டிக் கொண்டு பறப்பதற்குப் பெருமுயற்சிகள் செய்தான்.

புராதன கிரேக்கர்களின் இதிகாச வரலாற்றிலே இகாரஸ் என்பவனும் அவன் மகனும் இப்படிச் செயற்கை இறகு கட்டிக் கொண்டு பறந்ததாகவும் சூரியனின் அருகே சென்ற காரணத்தினால் மெழுகு கொண்டு உருவாக்கப்பட்ட பொய்யான இறகு உருகி அதனால் பூமியில் விழுந்து உயிரிழந்ததாகவும் ஒரு கதை இருக்கிறது(1). நமது புராணங்களிலே புஷ்பக விமானம் பற்றிய தகவல்கள் உள்ளன. விண்ணிலே பறக்கும் சாதனம்தான் அது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் சீன தேசத்திலே பட்டம் பறக்கவிடும் விளையாட்டு மிகப் பிரபலமாக இருந்தது(2). பட்டங்களைப் பலவிதமான உருவ அமைப்புக்களுடன் தயாரித்துப் பறக்கவிட்டு மகிழ்ந்தார்கள் சீனர்கள். டிராகன் போலவும், பலவித மிருகங்கள், பறவைகள் போலவும் பல வண்ணங்கள் கொண்ட பட்டங்கள் பறக்க விடப்பட்டன. நதிக்குக் குறுக்கே பாலங்கள் கட்டப்படும் காலங்களில் கட்டட வல்லுநர்களுக்குச் செய்திகளைப் பட்டங்கள் மூலம் பறக்கவிட்டு அனுப்பினார்கள் சீனர்கள். தாங்களும் பறக்க வேண்டும் என்ற ஆவல் அப்போது சீனர்களிடம் ஏற்படவில்லை.

1020ல் மால்மஸ்பரியைச் சேர்ந்த (Malmesbury) ஆங்கிலத் துறவியான ஆலிவர் (Oliver) என்பவர் பறவையின் இறக்கை போலக் குச்சிகளால் அமைத்து அதில் துணி போர்த்தி ஓர் உயரமான கட்டடத்திலிருந்து கீழே குதித்துப்பார்த்தார்(3). அவருடைய அந்தப் பொய்யான இறகுகளினால் அவர், பூமியில் விழுந்து காயமடைவதிலிருந்து அவரைக் காப்பாற்ற முடியவில்லை!


1490ல் கியோவானி டாண்டா (Giovanni Danta) என்ற இத்தாலியர் தம்முடைய கைகளில் பொய்யான இறக்கைகளை இணைத்துக் கொண்டு சற்றே உயரமானதோர் இடத்திலிருந்து காற்றில் மிதந்தபடி சறுக்கியவாறு ஓர் ஏரியைக் கடந்தார்(4). மனிதன் பறப்பதில் கண்ட வெற்றியின் முதல் படியாகக்கூட இதைக் கூறலாம். ஆனால் இதே முறையை (Gliding) ஒரு கோட்டை மீதிருந்து குதித்துப் பரீட்சித்தபோது படுகாயம் அடைந்தார்(5).


லியனார்டோ டாவின்சி என்ற இத்தாலியரைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். அவர் ஒரு சிறந்த ஓவியர், விஞ்ஞானி, கணித மேதை, சிந்தனையாளர், சிற்பி இப்படி எத்தனையோ சிறப்புக்களைக் கொண்ட அவர், மனிதன் பறப்பதற்கான பல்வேறு யந்திர சாதனங்களைக் கற்பனை செய்து அவைகளுக்கு வரை படம் எழுதி வைத்திருக்கிறார்(6). ஆகாய விமானத்தை மட்டுமல்ல, வேறு பல யந்திரங்களைப் பற்றியும் கனவு கண்ட தீர்க்கதரிசி டாவின்சி.

'வெறும் போலி இறக்கைகளை மட்டும் வைத்துக் கொண்டால் பறந்துவிட முடியாது. அதை இயக்குவதற்கு இன்

கிருஷ்ணவேணி








ளுரு சக்தியும் தேவை' என்ற எண்ணம் பரவலாக ஏற்பட்டது. யந்திர உதவியின்றி இத்தரையிலிருந்து எழும்ப முடியாது என்ற முடிவுக்கு வந்தான் மனிதன். இத்தகைய யந்திரத்தை மனிதன் தன் கைகளாலும் காலாலும் இயக்க வேண்டி இருக்கும் என்றும் தீர்மானித்தான்(7). ஆனால் அத்தகைய முயற்சிகள் மனிதனைப் பறக்க வைக்கவில்லை.


இந்த நிலையில் விண்வெளியை வெற்றி கொள்ளத் துடித்த மனிதன், 'செயற்கை இறக்கைகளுக்குப் பதிலாகப் பறப்பதற்குப் பலூன்களைப் பயன்படுத்தினால் என்ன?' என்று யோசிக்கலானான். நீரிலே காற்றினால் மிதந்து செல்லும் கப்பல்களைப் போல வானத்திலே மிதந்து செல்லும் ஒரு கப்பலைப் பலூன்களை இணைத்துக் கற்பனை செய்தார் ஒருவர்(8). அவர் பெயர் பிரான்ஸெஸ்கோ டி லானா (Francesco de Lana) என்பது. ஆனால் தம்முடைய இந்தக் கற்பனை வானக் கப்பலை இவர் கட்டிப் பார்க்கவில்லை.


இன்றைய ஆகாய விமானிகளுக்கு நெருப்பு மிகக் கொடிய விரோதி. ஆனால் இதே நெருப்பைப் பயன்படுத்தித்தான் முதன் முதலில் மனிதன் ஆகாயத்தில் பறக்கும் முயற்சிகளில் ஈடுபட்டான் என்றால் அது வியப்பாக இருக்கலாம். ஆனால், உண்மை அதுதான்.

விண்ணிலே பறப்பதற்கான ஒரு மார்க்கத்துக்கு வழி வகுத்துக் கொடுத்தவர்களில் பிரான்ஸ் தேசத்தைச் சேர்ந்த இரண்டு சகோதரர்கள் முதலிடம் பெறுகிறார்கள். ஸ்டீபன், ஜோசப் மாண்ட் கோல் ஃபிஸர் (Stephen and Joseph Montgolfiser) என்பது இவர்கள் பெயர். வீட்டுப் புகை போக்கிகளின் வழியாகப் புகை சுருண்டு சுருண்டு வானத்திலே மிதந்து செல்லும் காட்சி இந்தச் சகோதரர்களைக் கவர்ந்தது(9). "புகை எப்போதும் மேலேயே செல்லுகிறதே, அப்படியானால் இதைப் பயன்படுத்தி மனிதன் பறக்க முடியாதா?" என்று எண்ணமிட்டார்கள். காகிதத்தினால் ஒரு பெரிய பலூன் செய்தார்கள். அதன் அடியிலே ஒரு கூடையைப் பொருத்தி அதில் ஓர் எரிபொருளை வைத்துக் கொளுத்தி விட்டார்கள். மெள்ளப் பலூன் வானத்திலே எழுந்தது(10). மாண்ட் கோல்ஃபியர் சகோதரர்களுக்கு மகிழ்ச்சியான மகிழ்ச்சி. வெற்றி வெற்றி என்று கூத்தாடினார்கள். பலூனை மேலே எழச் செய்தது சூடான காற்றுத்தான் என்பது அப்போது அவர்களுக்குத் தெரியவில்லை. புகையினால் தான் பலூன் மேலே எழுந்து பறந்ததாக நினைத்தார்கள். இன்னும் பெரிய அளவில் உறுதியான பலூனைக் கட்டினார்கள். இதன் கீழிருந்த கூடைப் பகுதியில் பிலேட்டர் டி ரோஸியர் (Pilatre de Rozier) என்பவரும் மார்க்குவிஸ் டி ஆர்லான்டஸ் (Marquies de Arlandes) என்பவரும் அமர்ந்து கொண்டு அதை இயக்கினார்கள். பாரிஸ் நகரத்தின் மீது இந்தப் பலூன் 1783ம் ஆண்டு பறந்து வெற்றிக் கொடி நாட்டியது.

ஜோசப் பிளாக் என்ற ஆங்கில விஞ்ஞானி (Chemist) பலூன்களை மேலே எழச் செய்ய ஜல








வாயுவைப் பயன்படுத்தலாம் என்று கண்டு கூறினார். ஆனால் முதன் முதலில் இந்த ஜல வாயுவைக் குழந்தைகளின் விளையாட்டுப் பலூன்களில் மட்டுமே அடைத்துப் பயன்படுத்தினார்கள் (11). ஹைட்ரஜன் வாயுவினால் நிரப்பப்பட்ட பலூன்களுக்குப் பாரிஸ் மக்களிடையே மிகுந்த வரவேற்பும் பரபரப்பும் இருந்தன.


1785ல் ஜீன் பியரி ப்ளாங்கார்டு (Jean Pierre Blanchard) என்ற பிரஞ்சுக் காரரும் டாக்டர் ஜெஃப்ரியர்ஸ் (Dr. Jeffriers) என்ற அமெரிக்கரும் பலூன் மூலம் இங்கிலீஷ் கால்வாயை டோவரிலிருந்து பிரான்சுக்குக் கடந்து சென்றார்கள் (12). இந்த முயற்சியினால் பலூன் பறக்கும் உயரத்தைக் கட்டுப் படுத்துவதற்காக இவ்விருவரும் பட்ட பாடு கொஞ்ச நஞ்சமல்ல. தங்கள் உடைகளையெல்லாம் கூடக் கழற்றிக் கீழே வீசி எறியவேண்டி யிருந்தது.


பல பலூன் பிரயாணங்கள் வெற்றிகரமாக நிகழ்த்தப்பட்டன. மேலே மேலே உயரப் பறக்கலானார்கள். யார் அதிக உயரம் பறந்தார்கள் என்பதில் போட்டா போட்டிகள் ஏற்படலாயின. இன்றைய நவீன ஜலவாயு சிலிண்டர்களின் உதவி இல்லாமலே 1862ல் காக்ஸ்வெல், கிளாஷர் (Coxwell and Glaisher) என்ற இரு ஆங்கிலேயர்கள் ஏழு மைல் உயரம் வரை பலூனில் பறந்தார்கள். ஒரு நிலையில் ஜல வாயுவைக் கட்டுப் படுத்தும் வால்விலே கோளாறு ஏற்பட்டது. பலூனோ மேலே, மேலே உயரத்துக்குப் போய்க் கொண்டே யிருந்தது. கிளாஷர் மூர்ச்சையாகிவிழுந்தார். காக்ஸ்வெலின் உடல் குளிரினால் விரைத்துப் போயிற்று. முகமெல்லாம் சொரணை இழந்தது. அந்த நிலையிலும் மிக்க பிரயாசையுடன் மேலே ஏறி ஜல வாயுவை வெளியேற்றும் வால்வைப் பெரு முயற்சியுடன் திறந்துவிட்டார் (13). அதே சமயம்















அவருக்கும் நினைவு தப்பியது. ஆனால் ஜலவாயு வெளியேறியதினால் பலூன் கீழே இறங்கலாயிற்று. கதகதப்பான பகுதிக்குப் பலூன் வந்ததும் இருவருக்கும் நினைவு திரும்பியது. பலூனும் பூமியில் மோதித் தரை இறங்கியது (14).

பலூனில் பறப்பது பல வருடங்கள் தொடர்ந்தது. 'நாமும் விண்ணிலே பறக்க முடியும்' என்ற நம்பிக்கையும் மகிழ்ச்சியும் கொண்டான் மனிதன். ஆனாலும் அவனுக்குத் திருப்தி ஏற்படவில்லை. வாயுவை மட்டும் நம்பி இராமல் பறப்பதற்கு வேறு பல யந்திரங்களைத் தயாரிப்பதில் முனைந்தான். கிளைடர்களில் கண்ட வெற்றியைக் கருத்தில் கொண்டு அத்துடன் சக்கரங்களை இணைத்து இயக்கிப் பறக்கச் செய்வதிலே சோதனைகளை நடத்தினான். இன்றைய விமானத்தின் அமைப்புக்குக் கிட்டத்தட்ட இருந்தன, அந்த முயற்சிகள். சைக்கிள், மோட்டார் போன்ற அமைப்புக்களில் இறக்கைகளை இணைத்துப் பார்த்தார்கள். (15, 16, 17) ஆனால் இவ்வித அமைப்புக்கள் எதுவுமே மேலே எழுந்து வானத்திலே பறக்கவில்லை. காரணம் இவைகளிலே இவைகளை இயக்க இயந்திரம் இணைக்கப்படவில்லை.


கற்பனைகள் விரிந்தன. கஷ்டங்களும் தொடர்ந்தன. ஆனால் மனிதன் தளர்ந்துவிடவில்லை, விண்ணிலே பறப்பதற்கான முயற்சியில்.







தெரியுமா?



1559. முத்திரை இடுவதற்குப் பயன்படும் அரக்குக்கு ஆங்கிலத்தில் சீலிங் வாக்ஸ் (Sealing Wax) என்று பெயர். அப்படியானால் இது மெழுகா?

1560. ரொட்டி பூரித்துப் பஞ்சு போலவும் பெரிதாகவும் ஆக மாவுடன் எதைக் கலக்கிறார்கள் தெரியுமா?

1561. இன்றைய வத்திப் பெட்டிகளை — சேப்டி மாட்ச் —க் கண்டு பிடித்தது யார்? எந்த ஆண்டில்?

1562. டால்ஃபின், ஷார்க், ஸால்மன், ஸீ ஹார்ஸ் — இவற்றில் எது பாலூட்டி வகையைச் சேர்ந்தது.

1563. ஹாலந்து, பெல்ஜியம், லெபனான், ஸ்வீடன்—இதில் ஐரோப்பாவில் இல்லாத நாடு எது?

1564. முதல் ஆகாய விமானம் விண்ணிலே பறந்தது எப்போது?

1565. முதல் பிரயாணிகள் ரயில் வண்டி எங்கிருந்து எங்கே ஓடியது?

1566. வாயுவை ஒளி தரும் விளக்குகளாக உபயோகித்தது யார்? எந்த ஆண்டில்?

1567. யுத்தத்தில் ராக்கெட்டுகளை முதன் முதலில் பயன்படுத்தியது எப்போது?

1568. உலகின் முதல் முழுமையான டெலிவிஷன் சர்வீஸ் எங்கு செயல்படுத்தப்பட்டது?

1569. கடல்தாவரங்களால் என்ன உபயோகம்?

1570. கடல் பூண்டுகள் எத்தனை நீளம் வரை வளரக் கூடியவை?

1571. இங்கிலாந்தின் தோட்டம் என்று எதற்குப் பெயர்?

1572. ஸ்காண்டிநேவியர்கள் என்போர் யார்?

1573. ஜெர்மனியின் மிகப் பெரிய துறைமுகமும் இரண்டாவது பெரிய நகரமும் எது தெரியுமா?

1574. சோனா நதி (Sona River) எந்த ஜீவநதியின் கிளை நதி தெரியுமா?

1575. கிழக்கிந்தியத் தீவுகளில் ஒரு தீவு உலகிலேயே மிக அதிகமான சர்க்கரை உற்பத்திக்குப் பெயர் பெற்றது. அது எது?

1576. பீஹார் மாகாணத்தில் மிகப் பெரிய நிலக் கரிச் சுரங்கம் உள்ள இடத்தின் பெயர் என்ன?

1577. நியூயார்க்கில் உள்ள மிகப் பெரிய சர்வதேச விமான நிலையத்தின் பெயர் தெரியுமா?

1578. தூர கிழக்கில் ஒரு நகரத்தை 'தடைவிதிக்கப்பட்ட நகரம்' என்று அழைத்தார்கள். அது எது?

1579. உலகிலேயே மிக நீளமான நதி எது?


1580. ஜன நெருக்கம் மிகுதியான கண்டம் எது?

1581. கியூபாவின் தலைநகரம் எது தெரியுமா?


1582. முதல் அணுகுண்டு வீச்சு நடந்தது எந்த ஆண்டு, எங்கே?


1583. ஆக்ரா கோட்டையைக் கட்டியது யார் தெரியுமா?

தெரியுமே!




விடைகள்: 1559. இல்லை. அரக்கு, டர்பைண்டைன், இங்குலிகம் என்ற ஒரு தாது இம்மூன்றும் கலந்த கலவை. 1560. யீஸ்ட் என்னும் பொருளை. 1561. ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த லுண்ட்ஸ்ட்ரம் (Lundstorm) என்ற விஞ்ஞானியால் 1855ம் ஆண்டில். 1562. டால்ஃபின். 1563. லெபனான். 1564. டிசம்பர் 17, 1903ல். 1565. இங்கிலாந்திலுள்ள ஸ்டாக்டனிலிருந்து டார்லிங்டனுக்கு. 1566. வில்லியம் மர்டாக் என்பவரால் 1792ல். 1567. போலோன் (Boulogne) என்னுமிடத்தில் நடந்த போரில் 1806ல் இதைக் கண்டவரின் பெயர் காங்கிரே (Cnnqreve) 1568. லண்டனிலுள்ள அலெக்ஸாண்ட்ரா அரண்மனையிலிருந்து 1936ல். 1569. எவ்வளவோ. முக்கியமாக சில ரசாயனங்கள் கால்நடை உணவு, உரம் ஆகியவை தயாரிக்கப்படுகின்றன. 1570. ஒரு வகை 200 அடிகள் வரை வளரக் கூடியது. 1571. கென்ட் மாகாணத்துக்கு. 1572. டென்மார்க், நார்வே, ஸ்வீடன் ஆகிய பகுதிகளில் வாழ்வோருக்கு. சில வேளைகளில் ஐஸ்லாந்துக்காரர்களும் இவர்களோடு ஒன்றாகக் கருதப்படுவர். 1573. ஹாம்பர்க். 1574. கங்கையின் கிளை நதி. 1575. ஜாவா. 1576. ஜாரியா. 1577. ஜான் எஃப். கென்னடி விமான நிலையம். 1578. பீகிங் நகரத்தை. 1579. தென் அமெரிக்காவிலுள்ள அமேஸான் நதி. 1580. ஐரோப்பா ஜனத்தொகை 620 மிலியன், 1581. ஹவானா. 1582. ஆகஸ்ட் 6ம் தேதி 1245ம் ஆண்டு ஜப்பானிலுள்ள ஹிரோஷிமா, நாகசாகி நகரங்களின் மீது. 1583. மொகலாயப் பேரரசர் அக்பர்.


11
பலே பாலுவும் பாட்டில் பூதமும்
கதை: வாண்டு ~ சித்திரம்: செல்லம்
பாலு வீட்டுக் கணக்கு போடுகிறான்.
ஷேர்தில், இதோ பார் மூன்றாங்குல விட்டமுள்ள ஒரு குழாய் மூலம் ஆயிரம் காலன் தண்ணீர் பாய இரண்டரை மணி நேரமானால், மூன்றரை மணியளவில் எவ்வளவு தண்ணீர் பாயும்? விடை சொல்ல முடியுமா?
பிரபுவே கடினமான கணக்குத்தான்
கவலைவேண்டாம் பிரபுவே: இந்தக் கணக்குக்குச் செய்முறை மூலமே சரியான விடை காணலாம். இதோ மூன்றங்குலக் குழாய். இதை அந்த நீர்க் குழாயில் இணைத்து...
மூன்றங்குலக் குழாய் மூலம் வெளிப்படும் நீரை எதைக் கொண்டு அளப்பது? பூதம் அதற்கும் வழிகண்டது. அக்கம் பக்கத்திலிருந்த அண்டா குண்டாக்கள் அத்தனையையும் கொண்டு வந்து...
பிரபுவே... இதோ ஒரு குளிக்கும் தொட்டி.
ரொம்ப பேஜாரா இருக்கே...
இதோ அடுத்த கணக்கு-ஒன்பது அங்குல நீளமும் நான்கு அங்குல உயரமுமுள்ள 20000 செங்கற்களைக் கொண்டு இரண்டடி உயரமுள்ள சுவரை எவ்வளவு நீளத்துக்கு எழுப்பலாம்?
பிரபுவே, குழப்பிக் கொள்ள வேண்டாம். இதோ சுவரையே எழுப்புகிறேன். நீங்கள் அளந்து கொள்ளுங்கள்...
அசட்டு பூதம் எழுப்பிய சுவர் வீட்டுக் கொல்லையைத் தாண்டி வீதி வழியாகப் போய்....
இது என்னய்யா, நாங்க வீதியிலே போறதா இல்லையா?
ஹா... ஹூ... ஹா....
என் கடைக்குள் வராதே...
எழுபத்தைந்து, எழுபத்தாறு...



என் பிரபு வின் கணக்குக் காகா வேட்டை நாய் இதோ...
ஒரு வேட்டை நாய் மணிக்கு முப்பது மைல் வேகத்தில் ஓடக் கூடியது. இரக்கத்தில் இதைப் போல அரை மடங்கு அதிக வேகமாக ஓடும். மூன்று மைல் சரிவைக் கடக்க அதற்கு ஆகும் நேரம் எவ்வளவு?
சரியான ராஜபார்வையும், ஷேர் இதை எப்படி ஓட வைக்கப் போகிறான்?
கடைக்காரரே, அதோ பறப்பது என்ன பறவை?
பறவையா? எங்கே?
கசாப்புக்கடைக்காரனின் முயல்தான் மாயமாகப் பறந்து ஷேர்தில்லின் பைஜாமாவுக்குள் மறைகிறது.
பிரபுவே வேகத்தைக் கணக்கிடும் கருவியைச் சரியாகப் பார்த்துக் கொள்ளுங்கள். வேட்டை நாயை நான் விரட்டிக் கொண்டு போகிறேன்.
முயல் இரச்சியைக் கண்ட தெருநாய்கள் அத்தனையும் போட்டி போட்டுக்கொண்டு துரத்தி ஓடிவர பூதத்தின் பாடு திண்டாட்டமாகிறது.
பிரபுவே, எல்லாக் கணக்குகளும் போட்டாகிவிட்டதல்லவா? வகுப்பில் நீங்கள்தான் முதல் மாணவனாக இருப்பீர்கள்.
பாலு, உன் வீட்டுக் கணக்கு நோட்டைக் கொடு. கணக்குகளை நீயாகத்தானே போட்டாய்?
ஆமாம் சார்! நானே அனுபவ பூர்வமாகச் செய்திருக்கிறேன்.


இதெல்லாம் என்னடா பாலு? பதினைந்து குளிக்கும் தொட்டிகள், 96 பாட்டில்கள், 42 பெட்ரோல் டின்கள், 70 டால்டா டப்பாக்கள் நிறையத் தண்ணீர். இதுதான் நீ அனுபவ பூர்வமாகப் போட்ட கணக்குகளா? பேஷ்...
முதல்தரமான முட்டாள்களைக் கௌரவிக்க வென்றே தயாரிக்கப்பட்ட விசேஷக் கிரீடம் இது. இதை அணிவதற்கு நீங்கள் இருவருமே தகுதியானவர்கள்.
முட்டாள்
வகுப்பில் எல்லா வற்றிலும் முதல்வனுக இருந்த பாலு இப்பொழுது முட்டாளாகிக் கொண்டு வருவதைப் பற்றி பாலுவின் நண்பர்கள் பேசிக் கொள்ளுவதைப் பூதம் கேட்க நேரிடுகிறது. அதன் பலன்....
இந்தப் பையன் தன் சுய அறிவினாலும் திறமையினாலும் வாழ்க்கையில் முன்னுக்கு வரவேண்டியவன். தொடர்ந்து என் உதவி இருக்குமானால் இவன் திறமை குன்றப் போகும். ஆகவே இந்த நிலையில் நான் இங்கிருந்து கிளம்ப வேண்டியது தான்.
என்ன ஸேர்? ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறீர்? வகுப்பிலே முட்டாள் குல்லாய் மாட்டி விட்டாரே என்ற துக்கமா?
பிரபுவே எனக்காக வருத்தப்படவில்லை. என்னை வல்லவா நீங்கள் எல்லார் முன்னிலையிலும் சிரிப்புக்கு ஆளானீர்கள்...ம், பிரபுவே! ஒரு வேண்டுகோள்...
இதுவரை நான் எதிலுமே தோல்வி கண்டதில்லை. இனி நான் தங்களுக்கு அடிமையாக இருக்கத் தகுதியற்றவனாகி விட்டேன். எனக்கு விடை கொடுக்க வேண்டுகிறேன்.
நீ இருக்கிறுய் என்ற நினைப்பில் நான் கொஞ்ச நாளாகச் சோம்பேறியாகி, செயல்திறன் அற்றவனுக வந்தேன். இனி நான் சொந்தக் காலில் ஊன்றி நின்று எதையும் சமாளிக்கும் ஆற்றலைப் பெறுவேன். என் அருமை ஷேர்கில், நீ போய் வா....
முற்றும்

நீங்களும் மந்திரவாதியாகலாம்!

பொங்கல் விடுமுறை. நண்பர்கள் கூடியிருந்தார்கள். அதில் நடுநாயகமாக விளங்கினான் கிட்டு. அவன் தங்கை பட்டு. பொழுது போக ஏதாவது சுவாரஸ்யமான விளையாட்டுக்களைச் சொல்லுவான் கிட்டு. அவன் கெட்டிக்காரன். அதனாலேயே எப்போதும் நண்பர்கள் அவனைச் சூழ்ந்து கொண்டிருப்பார்கள். கிட்டுவிடமிருந்து புதிய விளையாட்டை எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள் நண்பர்கள். அப்போது கோபு வந்தான். அவன் டிராயர் பையில் சில்லறை கலகலத்தது.

"என்ன கோபு, இன்னிக்கு நீ பணக்காரன் போலிருக்கு!" என்றான் சீனு.

"என் சித்தப்பா ஊரிலிருந்து வந்திருக்கா. பொங்கல் காசு கொடுத்தார் அவர். அதுதான்" என்றான் கோபு.

"எவ்வளவு?" என்றுகேட்டான்ராமு.

"உன் பையில் உள்ள சில்லறை எவ்வளவு என்பதை நீ சொல்ல வேண்டாம் கோபு, நான் சொல்லுகிறேன்" என்றான் கிட்டு சட்டென்று.

"அதெப்படி அவன் பைக்குள் இருக்கும் சில்லறை எவ்வளவென்று உனக்குத் தெரிய முடியும்?"

"எப்படியோ சொல்லுகிறேனா இல்லையா பாருங்களேன். அதுமட்டுமல்ல. அவனுடைய வயதையும் கூட என்னால் கூற முடியும்."

"எங்கே பார்க்கலாம்?" என்றன குரல்கள் ஆர்வத்துடன்.

கிட்டு கோபுவிடம், "கோபு! நீ உன் வயதை என்னிடம் கூற வேண்டாம். ஆனால் அதை மனத்துக்குள் நினைத்துக் கொள் போதும்" என்றான்.

"சரி, நினைத்துக் கொண்டு விட்டேன்."

"அதை இரண்டால் பெருக்கு."

"ஆயிற்று."

"அத்துடன் ஐந்தைக் கூட்டு..."

"கூட்டியாயிற்று."

"கூட்டுத் தொகையை ஐம்பதால் பெருக்கு."

"ம்... பெருக்கி விட்டேன்."

"பெருக்கி வந்த தொகையிலிருந்து 365ஐக் கழி..."

"சரி, கழித்தாயிற்று!"


"இப்போது உன் டிராயர் பையிலுள்ள சில்லறையின் எண்ணிக்கையை (நயா பைசாக்களாக) அத்துடன் கூட்டிக்கொள். கூட்டி விட்டாயா? வந்துள்ள விடையை மட்டும் எனக்குச் சொல்லு. நான் உன் பைக்குள் இருக்கும் சில்லறைக் காசு எவ்வளவு என்பதையும் உன் வயதையும் கூறுகிறேன்" என்றான் கிட்டு. கோபு கடைசியாகக் கிடைத்த விடையைக் கூறினான். எல்லாரும் வியப்புடன் மூச்சை அடக்கிக் கொண்டு காத்திருந்தார்கள். கிட்டு டக்கென்று கோபுவின் வயதையும் அவனிடமுள்ள சில்லறையையும் கூறினான் சரியாக.


"எப்படி... எப்படி?,... எப்படி ?" என்று பல குரல்கள் கிட்டுவை மொய்த்துக் கொண்டன.

"இது ஒரு மந்திரவேலை" என்று முதலில் கிட்டு பிகு பண்ணிக் கொண்டாலும், பிறகு தன் நண்பர்களுக்கு அந்த ரகசியத்தை விளக்கினான். "கோபு கூறிய விடையுடன் 115ஐக் கூட்ட வேண்டும். கிடைக்கும் விடையின் முதல் இரண்டு எண்கள் அவனுடைய வயது- கடைசி இரண்டு எண்கள் அவனிடமுள்ள சில்லறையின் எண்ணிக்கை. அவ்வளவுதான். எத்தனை பெரியவர்களின் வயதையும் இந்த முறையில் கூறலாம். அதே மாதிரி ஒரு ரூபாய்க்குள் இருக்கும் சில்லறையையும் கூறிவிடலாம். உதாரணமாக:

கோபுவின் வயது	15
இரண்டால் பெருக்க	15 × 2—30
ஐந்தைக் கூட்டு	30 + 5—35
ஐம்பதால் பெருக்க	35 × 50 = 1750
365க் கழித்தால்	1750-365 = 1450
அத்துடன் 115க் கூட்டினால்	1450 + 115 = 1565


இதில் முதல் இரண்டு எண்கள் அவன் வயது—15. கடைசி இரு எண்கள் அவனிடமுள்ள சில்லறை – 65 பைசா.




எனக்கு சர்வ சக்திகளையும் அளித்து விட்டு, அசக்தன் போல நடிக்கும் ஸ்ரீராமா, உன் அருளால் சஞ்சீவி மூலிகைகளைக் கொண்டு வருவேன்.
ஜெய் ஹனுமான் 28
கதை: ரா. கணபதி
சித்திரம்: விநு
மாருதி சஞ்சீவி கொண்டுவரப் புறப்பட்ட செய்தி அறிந்த ராவணன் தன் நண்பனான காலநேமி என்ற அரக்கனை அழைத்தான்.
இந்த ஆஞ்சநேயக் குரங்கு எதையும் சாதிக்கும். ஆகவே, நீ எப்படியாவது அதை வழியிலேயே அழித்து விடவேண்டும்.
தனது மாயா சக்தியால் அனுமனுக்கு முன்பு இமய மலையை அடைந்து விடுகிறான் காலநேமி.
என் மாயா சக்தியால் இங்கு ஒரு பர்ணசாலை அமைத்து அதில் நான் ஒரு முனிவராக உருமாறி அந்தக் குரங்கை வரவேற்கிறேன்.
வா, வா, குழந்தாய்! ஆஞ்சநேயா, அவசரம் வேண்டாம். ராம லக்ஷ்மணர்களுக்கும் வானரப் படைகளுக்கும் புதிய அபாயம் ஏதுமில்லை. என்பதை என் ஞான திருஷ்டியால் அறிந்தேன்.
ஆகவே நீ, அதோ அந்தத் தடாகத்தில் நீராடி விட்டு வா. களைப்புத்தீர என் குடிலில் உணவருந்து. அதன் பிறகு நீ தேடி வந்துள்ள மூலிகைகளைப் பறித்துக் கொண்டு திரும்பலாம்.



தவசிரேஷ்டரே! தங்கள் விருப்பப்படியே இதோ நீராடி வருகிறேன்.
ஹ.. ஹ.. ஹா! தொலைந்தான் குரங்குப் பயல். அந்த ஏரியில் உள்ள முதலையிடமிருந்து தப்பியவர் எவருமில்லை.
தடாகத்திலிருந்த முதலை மாருதியின் காலைக் கௌவ, அதே சமயம் அது ஓர் 'அப்ஸரஸாக' மாறி...
ஒரு முனிவரின் சாபத்தினால் இங்கு முதலையாகக் கிடந்தேன். ராமதூதனாக வரும் ஓர் உத்தமரின் ஸ்பரிஸம் பட்டு எனக்குச் சாப விமோசனம் என்று கூறி இருந்தார் அவர்.
அந்த உத்தமர் தாங்கள் தான் என்று அறிந்து வணங்குகிறேன். தங்களை இங்கு அனுப்பியது முனிவரல்ல. முனிவர் உருவிலிருக்கும் ஓர் அரக்கன். ஆனாலும் அவன் செயல் எனக்கு விமோசனமளித்தது. வணக்கம். நான் வருகிறேன்.
உயிருடன் திரும்பிய அனுமனைக் கண்டு காலநேமி நடுநடுங்கினான்.
முனிபுங்கவரே! தாங்கள் எனக்கு உபதேசிக்கு முன் நான் தங்களுக்கு ஒரு காணிக்கை தர விரும்புகிறேன். இதோ பெற்றுக்கொள்ளுங்கள்.
இங்குள்ள மூலிகைகள் எல்லாமே ஒளி வீசுகின்றன. இவற்றில் ஜாம்பவான் கூறிய வைகளை எப்படித் தேடுவது? காலதாமதம் ஆகிப்போயிருக்கிறதே, என்ன செய்வேன்!
தொடரும்



மனைவி கேட்ட

வெகு காலத்துக்கு முன்னாலே ஒரு செல்வந்தனிடம் மாணிக்கம் என்று ஒரு வேலைக்காரன் இருந்தான். அந்தப் பணக்காரனுடைய ஆடுகளை மேய்ப்பது அவனுடைய வேலை. பல வருஷங்களாக நாணயமாக உழைத்தான், அந்த ஆடுகளை மேய்க்கும் வேலைக்காரன். ஒரு நாள் வழக்கம் போல் ஆடுகளை மேய விட்டு உட்கார்ந்திருக்கும்போது 'புஸ் புஸ்' என்று சீறும் சத்தம் அருகிலுள்ள காட்டிலிருந்து கேட்டது. அது என்ன என்று பார்ப்பதற்காகச் சத்தம் வந்த திசையை நோக்கிக் காட்டினுள் சென்றான் இடையன். அங்கு ஓரிடத்தில் ஒரு மரத்தைச் சுற்றிக் காய்ந்த புல்லும் இலைச் சருகுகளும் தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்தன. மரத்தின் ஒரு கிளையை ஒரு பாம்பு சுற்றிக் கொண்டு பீதியோடு சீறிக்கொண்டிருந்தது.


காற்று பலமாக வீசியதால் விரைவிலேயே அந்தத் தீ மரத்தையும் பற்றிக் கொள்ளும் நிலையில் இருப்பதைக் கண்டான் ஏழை மாணிக்கம். அந்த இக்கட்டான நிலையிலிருந்து பாம்பு எப்படித் தப்பப் போகிறது என்று எண்ணியபடி நின்றான். அப்போது பாம்பு, ''ஐயா! உமக்குப் புண்ணியம் உண்டு. என்னை இந்த நெருப்பிலிருந்து காப்பாற்றுங்கள்'' என்று வேண்டிக் கொண்டது. உடனே மாணிக்கம் தன்னிடம் இருந்த குச்சியைத் தீ ஜ்வாலைக்கு மேலாக மரக் கிளையில் படியும்படி வைத்தான். அந்தக் குச்சி வழியாக மரக் கிளையிலிருந்து இறங்கி வந்த பாம்பு மாணிக்கத்தின் கையைச் சுற்றிக் கொண்டது. பிறகு அவன் கழுத்தைச் சுற்றிக் கொண்டது. மாணிக்கம் பயத்தினால் நடுநடுங்கிப் போனான். எந்த விநாடி அந்தக் கொடிய பாம்பு தன்னைக் கடிக்கப் போகிறதோ என்ற பீதியுடன் ''எவ்வளவு துரதிர்ஷ்டசாலி நான்? உன்னை நெருப்பிலிருந்து விடுவித்தது என்னுடைய அழிவுக்காகத்தானா?'' என்றான் அழமாட்டாக் குறையாக.

பாம்பு சொல்லிற்று: ''பயப்படாதே, என்னுடைய தகப்பனார் பாம்புகளுக்கெல்லாம் அரசர். என்னை அவரிடம் கொண்டு போ.''

மாணிக்கத்துக்குப் பயம் தெளியவில்லை. 'பாம்புகளின் அரசனாவது, அவர் எங்கே இருக்கிறாரோ, எப்படிப் போவது, என் ஆட்டு மந்தையைத் தனியே தவிக்க விட்டு விட்டு?' இப்படி எண்ணிய மாணிக்கத்தின் சிந்தனையை அறிந்து கொண்டது போல் பாம்பு பேசிற்று. ''கவலைப்படாதே! உன்



இரகசியம்



ஆட்டு மந்தைக்கு எந்த ஆபத்தும் வராது. அதைத் தனியே விட்டுப் போக வேண்டுமே என்று கலங்காதே. சீக்கிரமே என்னை என் அப்பாவிடம் அழைத்துப் போ.''

வேறு வழியின்றி மாணிக்கம் கழுத்தைச் சுற்றிய பாம்புடன் காட்டுக்குள்ளே வெகுதூரம் போனான். பாம்பு வழிகாட்டிக் கொண்டிருந்தது. ஓரிடத்துக்கு வந்ததும் 'இங்குதான், நில்' என்றது பாம்பு. மாணிக்கம் நின்றான். எதிரிலே ஒரு பெரிய கோட்டை வாசல் போன்ற நுழை வாயில் தெரிந்தது. ஆனால் அது அத்தனையும் பாம்புகளால் ஆனது. பல ஆயிரம் பாம்புகள் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்தபடி ஒரு பெரிய நுழை வாயிலைப் போல் உருவாக்கி இருந்தன. அதன் கதவும்கூடப் பாம்புகளால் வேயப்பட்டிருந்தது. மாணிக்கத்துக்கு உடம்பெல்லாம் பயத்தினால் வியர்த்துக் கொட்டியது. உடல் கிடுகிடுவென்று நடுங்கியது. அப்போது அவன் கழுத்திலிருந்த பாம்பு இனிமையாகச் சீட்டியடித்தது. உடனே பாம்புகளால் பின்னப்பட்டிருந்த நுழை வாயிலின் கதவுப் பகுதியிலுள்ள பாம்புகள் பிரிந்து விலகிக் கொள்ள வழி ஏற்பட்டது. அதன் வழியாக நுழைந்து உள்ளே சென்றான் மாணிக்கம்.

போகும் போது அவன் கழுத்தைச் சுற்றிக் கொண்டிருந்த பாம்பு கூறியது. ''அரண்மனைக்குப் போனதும் அப்பா உங்களுக்கு, நீங்கள் எதைக் கேட்டாலும் அதைக் கொடுப்பதற்குத் தயாராக இருப்பார். 'தங்கம், வெள்ளி, நவரத்தினங்கள் — உலகத்தில் மிக உயர்வாக நீ எதைக் கருதுகிறாயோ, அதைக் கேள், தருகிறேன்' என்பார். ஆனால் நீங்கள் அதையெல்லாம் கேட்டுப் பெறாதீர்கள். பறவைகள் மிருகங்களின் பாஷையைப் புரிந்து கொள்ளும் சக்தியை, அந்த ரகசியத்தைச் சொல்லிக் கொடுக்கும்படி கேளுங்கள். முதலில் மறுத்தாலும் முடிவில் உங்கள் விருப்பத்துக்கு இணங்குவார். அதனால் உங்களுக்குப் பல நன்மைகள் கிடைக்கும்'' என்றது.

பாம்பரசனின் அரண்மனைக்குப் போனதும் பாம்பு மன்னன் தமது மகளைக் கண்ட ஆனந்தத்தில் அழுதேவிட்டார். அவரது ஒரே மகளான அந்தப் பாம்பை நீண்ட நெடு நாட்களாகக் காணாமல் 'அருமை மகள் இறந்துவிட்டாள்' என்று எண்ணி இருந்த வேளையில் உயிரோடு மகளைக் கண்டால் எப்படி இருக்கும்? அப்பாவின் ஆனந்தம் அடங்கியதும் மகள், நெருப்பிலே வெந்து மடியவிருந்த தன்னை அந்த மனிதன் எப்படிக் காப்பாற்றினான் என்பதை விளக்கி மாணிக்கத்தையும் அறிமுகப்படுத்தினாள் அப்பாவிடம். பாம்பரசன் பரவசமடைந்து, '' ஐயா! என் அருமை மகளைக் காப்பாற்றியதற்காக நீங்கள் எது கேட்டாலும் அதை நான் உங்களுக்குத் தரச் சித்தமாக இருக்கிறேன்'' என்றான்.

''பறவைகள், பிராணிகள் பாஷையைப் புரிந்துகொள்ளும் சக்தி எனக்கு வரும்படி செய்ய வேண்டும். நான் விரும்புவது அதுதான்'' என்றான் மாணிக்கம்.

''அத்தகைய சக்தியினால் உனக்குப் பலன் ஏதும் இருக்காது. அந்தச் சக்தியை நான் உனக்கு அளிப்பேனானால், நீ அந்த ரகசியத்தைப் பிறருக்குச் சொல்ல நேரும்போது நீ உடனே மரணமடைய நேரிடும். ஆகவே, வேறு எதையாவது கேள். மறுக்காமல் அளிக்கிறேன்'' என்றான் பாம்பரசன்.

''தருவதானால் நான் கேட்டதைத் தாருங்கள். இல்லையேல் வேறு



எதுவும் வேண்டாம்'' என்று கூறிக் கிளம்பத் தயாரானான் மாணிக்கம்.

உடனே நாகராஜன், ''வேறு எதையும் நீ விரும்பாவிடில் உன் எண்ணப்படியே பறவை பிராணிகளின் பாஷையை நீ புரிந்து கொள்ளும் ஆற்றலை அளிக்கிறேன், வாயைத் திற'' என்றார். மாணிக்கமும் வாயைத் திறந்தான். பாம்பு மன்னன் தனது பிளவுண்ட நாக்கினால் மாணிக்கத்தின் நாவிலே எதையோ எழுதினான். பிறகு, ''மற்ற ஜீவராசிகளின் பேச்சை உன்னால் இனி இனங் கண்டு கொள்ள முடியும். நீ நிம்மதியாகப் போகலாம். ஆனால் உன் உயிர் மீது உனக்கு ஆசை இருக்குமானால் பறவை மிருகங்களின் பாஷையை உன்னால் புரிந்து கொள்ள முடியும் என்ற ரகசியத்தை நீ வேறுயாரிடமும் கூறக் கூடாது. அப்படிக் கூறுவாயானால் அந்த விநாடியே நீ மரணமடைவாய்'' என்று எச்சரித்து விடை கொடுத்து அனுப்பினான் பாம்பு அரசன்.

மாணிக்கம் கானகத்தின் வழியே திரும்பிக்கொண்டிருக்கும்போது பறவைகளின் ஒலியைக் கேட்டான். அது அர்த்தமற்ற சத்தமாக இல்லை. அவை ஒன்றுக்கொன்று பேசிக் கொள்ளுவதை அவனால் உணர முடிந்தது. துள்ளி ஓடும் மான், தாண்டி மறையும் முயல், ஊர்ந்து செல்லும் எறும்பு இவைகளிடமெல்லாம் தன் சக்தியைச் சோதித்துத் திருப்தி அடைந்தவன் தான் விட்டுச் சென்ற ஆட்டு மந்தையின் அருகில் வந்தான். ஆடுகள் அமைதியாக மேய்ந்து கொண்டிருந்தன. மாணிக்கத்துக்குக் களைப்பாக இருக்கவே ஒரு மரத்தடியில் கண்களை மூடியபடி உடலைக் கிடத்தினான் ஓய்வு பெற. அப்போது இரண்டு பஞ்ச வண்ணக் கிளிகள் அந்த மரத்தில் வந்து உட்கார்ந்து பேசிக் கொண்டன. ''இந்த ஆடுகள் மேய்ந்து கொண்டிருக்கின்றனவே, இங்கு அந்தப் பூமியின் கீழே, பத்துத் தவலைகள் நிறையப் பொன்னும் மணியும் பொருளும் புதையுண்டு கிடக்கும் ரகசியம் இதோ இங்கு தூங்கிக் கொண்டிருக்கும் இடையனுக்குத் தெரியுமோ என்னவோ? தெரிந்தால் அவன் என்ன செய்வானோ?'' என்றபடி பறந்து போயின. கண் மூடித் தூங்காமலிருந்த மாணிக்கம் இதைக் கேட்டான். உடனே தன் எஜமானனிடம் போய் அந்த இடத்தில் புதையல் இருப்பதைக் கூறினான். தனவந்தன் மாணிக்கத்துடன் அந்த இடத்தைத் தோண்டிப் பார்க்க அங்கு பத்துத் தவலைகள் இருந்தன. ஒவ்வொன்றிலும் விலை மதிப்பற்ற பொக்கிஷங்கள். தவலைகளை வண்டியில் ஏற்றி வீட்டுக்குக் கொண்டு போனான் தனவந்தன். அந்தப் புதையலை அப்படியே மாணிக்கத்திடம் அவர் ஒப்படைத்து விட்டார்.

''மாணிக்கம்! இது உன்னைச் சேர வேண்டிய பொருள். உன்னுடைய நாணயத்துக்கும், உழைப்புக்கும் ஆண்டவன் கொடுத்திருக்கும் வெகுமதி இது'' என்று கூறி வாழ்த்தி அனுப்பி வைத்தார். பெருஞ் செல்வத்துக்கு அதிபதியாகிவிட்ட மாணிக்கம் அடுத்த ஊருக்குப் போய் ஏராளமான நிலபுலன்களை வாங்கினான். அரண்மனை போன்ற மாளிகையைக் கட்டிக் கொண்டான். சுகபோகமாக வாழ்ந்து வந்தான். மிகப் பெரிய பணக்காரனாக விளங்கினான்.

ஒரு பொங்கல் பண்டிகையின் போது தன் மனைவியிடம் கூறினான். மாணிக்கம் ''ஒரு பெரிய வனபோஜன விருந்துக்கு ஏற்பாடு செய். நம்முடைய பண்ணையாட்களுக்கு நாம் பொங்கல் விருந்து கொடுத்து அவர்களை மகிழ்விப்போம்'' என்றான். அவனிடம் ஏராளமான ஆடு மாடுகள் இருந்தன. அவைகளைப் பராமரிக்கும் பணியாளர்களையெல்லாம் அழைத்தான் மாணிக்கம். ஒரு காலத்தில் தான் ஏழை இடையனாக உழைத்ததை அவன் மறந்து விடவில்லை. ''இன்று முழுதும் நீங்கள் என் அரண்மனையில் போய் விருந்துண்டு உல்லாசமாக உங்கள் இஷ்டப்படி மகிழ்ந்திருங்கள். நான் இன்றைக்கு இந்த ஆடு மாடுகளைக் காவல் காக்கிறேன்'' என்று கூறி அவர்களைத் தன் அரண்மனைக்கு அனுப்பி வைத்தான். பட்டியில் காவல் காக்க மனைவியுடன் கிளம்பிவிட்டான்.

நள்ளிரவு..... ஓநாய்கள் ஊளையிட்டன. காவல் நாய்கள் குரல் கொடுத்தன. ஆனால் மாணிக்கத்துக்கு அந்த ஒலியில் அவை பேசிக் கொள்வது துல்லியமாகக் கேட்டது. ஓநாய்கள் கூறின. ''ஆட்டு மந்தையினுள்ளே புகுந்து வயிறுரப் புசிக்க எங்களை அனுமதியுங்கள். நீங்களும்கூட ருசித்து மகிழலாம். வெறுமனே காவல் காத்துக் கண்ட பலன் என்ன?''

நாய்கள் கூறின: ''வாஸ்தவம்தான். எங்களுக்கும் இறைச்சியை ருசிக்க விருப்பம்தான். ஒரே ஒரு முறை மட்டும் உங்களை அனுமதிக்கிறோம்....... வாருங்கள்!''

காவல் நாய்களில் ஒரே ஒரு கிழட்டு நாய் இருந்தது. பல்லெல்லாம் போன படு கிழடு. அது சொல்லிற்று, ''ஓநாய்களே! என் உடலில் உயிர் இருக்கும் வரை நீங்கள் இங்கே நெருங்க முடியாது. நான் என் எஜமானனுக்குத்



அட்டையில் :

ஏரும் உழவும் இயங்கிட வேண்டி
சூரிய தேவன் பேரருள் நாடி
நீரும் நிலமும் வழங்கிய பொருளை
சீருடன் படைப்போம் ; சிந்தையில் மகிழ்வோம்.

வண்ணப்படம் : கே. ராமச்சந்திரன்

துரோகம் செய்யமாட்டேன். நீயே விருக்கட்டும்'' என்றது. இவைகளின் சம்பாஷணை முழுவதையும் கேட்டுக் கொண்டிருந்தான் மாணிக்கம். பொழுது விடிந்தது. விருந்துண்டு ஆடிப் பாடி மகிழ்ந்த பண்ணையாட்கள் அரண்மனையிலிருந்து திரும்பி வந்தார்கள். அவர்களிடம், ''அதோ, அந்தக் கிழட்டு நாய் ஒன்றைத் தவிரப் பண்ணையில் உள்ள காவல் நாய்களையெல்லாம் சுட்டுக் கொல்லுங்கள்'' என்று கட்டளையிட்டான். பணியாளர்களுக்கு ஓரே அதிர்ச்சி. 'எஜமானனுக்கு என்ன நேர்ந்தது? ஏன் இப்படியோர் உத்தரவு?' என்று வியந்தவர்கள், ''பாவம், வாயில்லாப் பிராணிகள். கொல்லுவானேன்?'' என்றார்கள்.

ஆனால் மாணிக்கம், ''நான் சொன்னபடி செய்யுங்கள்'' என்று கடுமையாகக் கூறிவிட்டு மனைவியுடன் குதிரை மீது ஏறினான், அரண்மனைக்குத் திரும்ப. மாணிக்கத்தின் மனைவி ஏறி இருந்த குதிரை குட்டிக் குதிரை. மாணிக்கத்தின் குதிரை நன்கு வளர்ந்த பெரிய குதிரை. ஆகவே மனைவியின் குதிரை மெதுவாகப் பின் தங்கி வந்தது. மாணிக்கத்தின் குதிரை பின்னால் திரும்பிப் பார்த்துக் கனைத்தபடி கூறியது. ''சீக்கிரம் வேகமாக வா. ஏன் இப்படி ஆடி அசைந்து வருகிறாய்?''

குட்டிக் குதிரை சொல்லிற்று. ''உனக்கென்ன, நீ பேசமாட்டாயா? நீ சுமப்பது நம் எஜமானரை. அவரோ ஒல்லியானவர். இவளோ புளி மூட்டை போல் மூன்று ஆள் கனம் இருக்கிறாள். என் முதுகே ஒடிந்துவிடும் போல் இருக்கிறது. என்ன பருமன், என்ன பருமன்!'' என்றது. குதிரைகளின் சம்பாஷணையைக் கேட்ட மாணிக்கம் திரும்பித் தன் மனைவியைப் பார்த்தான். அவனால் சிரிப்பை அடக்க முடியவில்லை. மனைவியின் கொழுத்த சரீரத்தைக் குதிரைக் குட்டி சுமக்க முடியாமல் சுமந்து படும் அவஸ்தையைக் கண்ட போது அவனுக்குச் சிரிப்புப் பொங்கி வந்தது.

மாணிக்கத்தின் மனைவி தன் குதிரையை விரட்டிக் கொண்டு கணவன் அருகே வந்தவள், ''எதற்காக இப்படிச் சிரிக்கிறீர்கள், என்னைப் பார்த்து?'' என்று கேட்டாள். ''ஒன்றுமில்லை !'' என்றான் மாணிக்கம். ஆனால் அவள் அதை நம்புவதாக இல்லை. மேலும் மேலும் மேலும் கணவனைத் துளைக்கலானாள். கண்ணீர் விட்டாள். கடிந்து கொண்டாள், ஏசினாள், பலப் பல பேசினாள். ஆனாலும் மாணிக்கம் உறுதியோடு இருந்தான். உண்மையைக் கூறவில்லை. ''எதற்காகச் சிரித்தேன் என்று எனக்கே தெரியாது !'' என்றான். அவன் மறுக்க மறுக்க அவள், தன் கணவன் எதையோ மறைப்பதாகக் கூறி வீம்பு செய்தாள், சொன்னால்தான் ஆயிற்று என்று. முடிவில் அவளுடைய அடம் அவன் உறுதியைக் குலைத்தது. ''நான் அந்த உண்மையைக் கூறினால் உடனே இறந்து போவேன்'' என்றான். இதற்கும் அவள் மனம் மாறவில்லை. ''சொன்னால்தான் ஆயிற்று !'' என்றாள். இதற்குள் அவர்கள் அரண்மனைக்கு வந்து சேர்ந்துவிட்டார்கள்.

குதிரையிலிருந்து இறங்கிய மாணிக்கம் தன் கடைசிப் படுக்கையைத் தயார் செய்யும்படி ஊழியர்களிடம். உத்தரவிட்டான். அது தயாரானதும், ''இதோ என் கடைசிப் பயணத்துக்கான ஏற்பாடுகள் எல்லாம் தயாராகி விட்டன. நான் எதற்காகச் சிரித்தேன் என்பதை உன்னிடம் கூறியவுடனே என் உயிர் போய்விடும்'' என்று கூறியபடி அதில் போய்ப் படுத்துக் கொண்டான். உண்மையைச் சொல்லுவதற்கு முன்பு ஒரு முறை தன்னுடைய வீடு வாசல்களைச் சுற்று முற்றும் பார்த்தான். அப்போது விசுவாசம் உள்ள அவனுடைய கிழட்டு நாய் அங்கு வந்தது. அதன் கண்களில் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. குனிந்த தலையோடு மாணிக்கம் அமர்ந்துள்ள பாடையின் அருகே வந்து தானும் அமர்ந்து கொண்டது. அதைக் கண்ட மாணிக்கம் வாஞ்சையுடன் அதன் தலையைத் தடவிக் கொடுத்தான். பிறகு தன் மனைவியிடம் ''இதற்கு ஒரு ரொட்டி கொண்டு வந்து போடு. இது சாப்பிடுவதைக் கடைசியாகப் பார்த்துவிட்டுப் போகிறேன்'' என்றான்.

தன்னைக் கண்டு சிரித்ததின் காரணத்தை விரைவில் அறிந்து கொள்ளும்

வேகத்தில் அவன் மாணிக்கம் எது சொன்னாலும் கேட்கத் தயாராக இருந்தான். ஆகவே ஓடிப் போய் ஒரு பெரிய ரொட்டித் துண்டைக் கொண்டு வந்து போட்டாள் நாயின் முன்னால். ஆனால் அந்த நாய் அதைத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. தன்னை வளர்த்த எஜமானன் சாகத் தயாராக இருக்கும் போது யாருக்குத்தான் சாப்பிட மனம் வரும்?

அப்போது அரண்மனையின் கொல்லைப் பக்கமிருந்து ஒரு சேவல் கம்பீரமாக வந்தது. கீழே கிடக்கும் ரொட்டியைக் கண்டதும் ஆவலுடன் அதைக் கொத்திக் கொரிக்கலாயிற்று. அப்போது கிழட்டு நாய், ''அறிவுகெட்டவனே! நம் எஜமானன் சாகத் துணிந்த இந்த வேளையில் உனக்கு எப்படி இவ்வளவு ஆவலுடன் சாப்பிட மனம் வருகிறது?'' என்று கேட்டது.

சேவல் சொல்லிற்று. ''புத்தியில்லாதவர்கள்தான் இப்படிச் சாவார்கள். எனக்கு நூறு மனைவிகள், தெரியுமல்லவா? ஏதாவது தானியக் குவியலையோ உணவையோ நான் கண்டேனானால் குரல் எடுத்துக் கூவி அழைப்பேன், என் எல்லா மனைவிகளையும். எல்லா மனைவிகளும் வந்து கூடியதும் அந்த உணவை அவர்கள் கண் முன்னாலேயே சுகமாக நானே விழுங்குவேன். எவளாவது ஒருத்தி முகம் கடுத்தாலோ, மூச்சுவிட்டாலோ தொலைத்து விடுவேன் தொலைத்து. என் கூரான அலகினால் குத்திக் குதறி விடுவேனாக்கும். இவருக்கோ ஒரே ஒரு மனைவி. இந்த ஒருத்தியைக்கூட இவரால் வைக்கிறபடி வைக்கத் தெரியாவிட்டால் இப்படிக் கேவலமாக உயிரிழக்க வேண்டியதுதான்'' என்றது சேவல், கம்பீரமாகவும் அலட்சியமாகவும்.

இதைக் கேட்ட மாணிக்கம் கடைசிப் பயணத்துக்கான பல்லக்கிலிருந்து எழுந்திருந்தான். அருகிலிருந்த புளியமரத்திலிருந்து உறுதியான ஒரு குச்சியை ஒடித்து எடுத்துக் கொண்டான். மனைவியைப் பார்த்து, ''சரி, சரி, வா, நீ இத்தனை பிடிவாதமாக அறிந்து கொள்ளத் துடிக்கும் ரகசியத்தைக் கூறுகிறேன்'' என்று சொல்லி அவள் கையைப் பற்றி இழுத்துக் கொண்டு ஓர் அறைக்குள் போனான். அறைக் கதவை அறைந்து சாத்தினான். அடுத்த விநாடி அங்கிருந்து, ''நீ அறிய விரும்பினாயே அந்த ரகசியம் இதுதான், இதுதான்'' என்ற மாணிக்கத்தின் குரலும் அதை அடுத்து அவனுடைய மனைவியின் அலறலும் வெகுநேரத்துக்குத் தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருந்தன!

இப்போதெல்லாம் மாணிக்கத்தின் மனைவி தன் கணவனிடம் எதைப் பற்றியும் அறிய அடம் பிடித்து ஆர்ப்பாட்டம் செய்வதில்லையாம்!

ஓவியப் போட்டி

மா. பா. குருசாமி

மறு நாள் ஓவியப் போட்டிக்கான படங்களைக் கொடுக்க வேண்டும்.

சந்திரன் தீட்டிய படத்துக்கு 'பைனல் டச்' கொடுத்துக் கொண்டிருந்தான். படம் மிகவும் பிரமாதமாக அமைந்திருப்பதாக எண்ணம்.

கதிரவன் மலைவாயில் விழும் காட்சியைத் திறம்படத் தீட்டியிருந்தான். மஞ்சள் வண்ணத்தை அளவோடு எங்கெங்கு பூச வேண்டுமோ அங்கெல்லாம் தீட்டி முடித்த போது அவன் மனம் நிறைந்துவிட்டது.

''இந்த ஆண்டும் பரிசு எனக்குத் தான்'' என்று அவன் மனத்துக்குள் சொல்லிக் கொண்டான். அந்த நேரத்தில் அவன் நண்பன் மாணிக்கம் அங்கு வந்து சேர்ந்தான்.

கடந்த மூன்றாண்டுகளாகப் பள்ளி ஓவியப் போட்டியில் சந்திரனுக்குத்தான் முதல் பரிசு கிடைத்து வந்திருக்கின்றது. அவனிடம் ஓவியம் வரைவதில் அலாதித் திறமை இருந்தது. அதனால் தனக்கு நிகரில்லை என்ற பெருமிதமும் இருந்தது.

நூற்றுக்கு நூறு மார்க்குகள் வாங்கியவன் உடனே அதை நான்குபேரிடம் சொல்லி மகிழ்ச்சி அடைவது போல் சந்திரனும் தான் போட்டிருந்த படத்தை மாணிக்கத்திடம் காட்டி, அவன் வாயால், 'சபாஷ் இந்த ஆண்டும் பரிசை நீதான் தட்டிக்கொண்டு போகப் போகிறாய்' என்று சொல்வதைக் கேட்க வேண்டும் என்ற ஆவல்.

''மாணிக்கம்! இதுதான் போட்டிக்கு நான் கொடுக்கப் போகிற படம்'' என்று சொல்லிப் படத்தை மாணிக்கத்தின் கையில் சந்திரன் கொடுத்தான்.

படத்தைக் கையில் வாங்கிய மாணிக்கம் சந்திரன் எதிர்பார்த்தது போல் போற்றிப் புகழவில்லை. மாறாக உதட்டைக் கோணலாக்கிக் கொண்டு, சிறிய தயக்கத்துக்குப்பின், ''சந்திரன், எப்படியும் இந்த ஆண்டு உனக்கு இரண்டாம் பரிசு கிடைத்துவிடும்'' என்றான்.

இதனைக் கேட்டபோது சந்திரனுக்கு யாரோ அவனைத் தலைகுப்புற மலை உச்சியிலிருந்து தள்ளிய



தைப் போல் இருந்தது. சமாளித்துக் கொண்டு, ''மாணிக்கம், என்னடா சொல்லறே?'' என்று கேட்டான்.

''சந்திரன், அந்தப் பெண் ராஜம் வரைந்திருக்கிற படத்தைப் பார்த்தால் நிச்சயம் நீ கூடப் பரிசு அதுக்குத் தான்னு சொல்லுவே. ஒரு பசு மாட்டிடம் கன்றுக் குட்டி பால் குடிக்கிறாற் போல் படம் போட்டிருக் கிறாள். உயிரோடு மாடும் கன்றும் இருக்கிறது மாதிரியே இருக்கு. வெறும் இண்டியன் இங்கைக் கொண்டே பிரமாதமா சித்திரம் போட்டிருக் கிறாள். மூணு வருஷமா நீ வாங்கின பரிசு இந்த ஆண்டு கை மாறப் போகு துன்னு எல்லாரும் பேசிக்கிறாங்க!'' மாணிக்கம் உற்சாகத்தோடு தான் கண்டதையும் கேட்டதையும் அப்படியே வர்ணித்தான்.

சந்திரனின் மனத்தில் இருட்டு நிறைந்துவிட்டது. பித்துப் பிடித்தது போல் சந்திரன் அமர்ந்திருப்பதைக் கண்டு மாணிக்கம், ''நான் வர் றேண்டா'' என்று கூறிவிட்டு அங் கிருந்து நழுவி விட்டான்.

சந்திரனுக்கு ராஜத்தைக் கண் டாலே பிடிப்பதில்லை. அதற்குப் பல காரணங்கள் உண்டு. அவள் அந்த ஆண்டுதான் அவர்கள் வகுப்பில் வந்து சேர்ந்தாள். அவளுடைய அப்பா பெரிய உத்தியோகஸ்தர். அவர் போகும் இடங்களுக்கெல்லாம் அவ ளும் கூடவே போய் வந்து கொண் டிருந்தாள்.

ராஜம் மிகவும் இனிமையாகப் பாடு வாள். வண்ணத்துப் பூச்சி போன்று 'துருதுரு'வென்று வகுப்பெல்லாம் வளைய வருவாள். எல்லோரிடமும் அன் போடு பழகுவாள். அவள் புதிதாக வந்த தாலோ என்னவோ அவளிடம் எல் லோரும் பிரியத்தோடு பழகினார்கள்.

ஆதலால் அவளையே அவர்களது இலக்கியச் சங்கத்துக்குக் காரியதரிசி யாகத் தேர்ந்தெடுத்தார்கள். ''ஒரு பெண்ணைப் போய்க் காரியதரிசியாக்க உங்களுக்கெல்லாம் வெட்கமாக இல் லையா?'' என்று சந்திரன் சொன்னதை அவன் வகுப்பு மாணவர்கள் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

இப்பொழுது ராஜத்துக்கு ஓவியப் போட்டியில் வேறு முதல் பரிசு கிடைத்துவிட்டால் பிறகு, அவள் தான் எல்லாம். இதை அவனால் எப்படிச் சகிக்க முடியும்?

'எப்படியும் இந்த ஆண்டு முதல் பரிசை வாங்க வேண்டும். அதற்கு என்ன செய்வது?' என்று மிகவும் தீவிர மாக யோசித்தான் சந்திரன். அவனுக்கு ஒரு வழியும் தோன்றவில்லை, அவனால் அமைதியாக வீட்டில் உட்கார்ந்திருக்க வும் முடியவில்லை. அவனைச் சுற்றி நெருப்பு எரிவது போல் அவன் உள்ளம் தகித்துக் கொண்டிருந்தது.

அடுத்த தெருவில் ராஜத்தின் வீடு இருந்தது. அங்கு சென்று அவள் வரைந்திருக்கும் படத்தைப் பார்த்து விட்டு வர வேண்டும் என்று நினைத் தான். ''மாணிக்கம் சொன்னது தவறாக இருந்தால்...'' என்றொரு நப்பாசை முளைவிட்டதுதான் இந்த நினைப்புக்குக் காரணம்.

அப்பொழுது மாலை மணி ஆறு இருக்கும். பல வகையாகச் சிந்தித்த வாறு ராஜத்தின் வீட்டுக்குச் சென்றான். ராஜத்தின் வீட்டின் முன்னாலும் கூடத்தி லும் ஒருவரும் காணோம். சமையல்கட் டில் அவளது அம்மா இருக்கலாம்.

கூடத்தில் நுழைந்து, ''ராஜம்!'' என்று குரல் கொடுக்க நினைத்தவன், அப்படியே நின்றுவிட்டான். அங்கு ஓர் ஓரத்தில் இருந்த மேஜையின் மீது மாணிக்கம் சொன்ன அதே படம் இருந் ததுதான் காரணம்.

நெருங்கி நின்று படத்தைப் பார்த் தான். மாணிக்கம் சொன்னது உண்மை என்பது தெரிந்தது. பசுவும் கன்றும் அவனுக்கு முன்னால் நிற்பதைப் போலவே தோன்றியது.

அவன் மனத்தில் பளிச்சென்று ஒரு திட்டம் உருவாகியது. சுற்றிலும் பார்த்தான். அவனை யாரும் கவனிக்க வில்லை. படத்துக்குப் பக்கத்திலிருந்த 'இண்டியன் இங்க்' பாட்டிலின் மூடி யைத் திறந்தான். பாட்டிலைத் தலை கீழாகக் கவிழ்த்து விட்டான். தாளில் ஒரே கறுப்பு. பசுவின் முகம் மறைந்து விட்டது. கன்றின் உடலில் ஓடை போல மை ஓடியது.

பூனை போல் மெதுவாக வீட்டை விட்டு வெளியேறிய சந்திரன், திருடன் போலத் திரும்பித் திரும்பிப் பார்த் துக் கொண்டே தெருவைக் கடந்துவிட் டான். அவன் தன் வீட்டை அடைந்த பிறகுதான் ஒரு நிதானம் வந்ததுபோல் இருந்தது. ஆனால், உண்மையில் மனம் படபடவென்று அடித்துக் கொண்டது. முதலில், ''இனி பரிசு எனக்குத்தான்'' என்று நினைத்த மனம், பிறகு தேளாக மாறி அவனைக் கொட்டத் தொடங்கி விட்டது. குற்றம் செய்துவிட்ட மன நிலை அவனை வாட்டியது.

இதுவரை சந்திரன் இப்படிப்பட்ட எந்த வேலையையும் செய்ததில்லை.



வாடா மலர்

நீ குழந்தைகளைப் போலவே இருக்கப் பாடுபட வேண்டும்.

ஆனால், உன்னைப் போல அவர்களை ஆக்க முயலாதே. - கலீல் கிப்ரான்

• • •

கள் விற்றுக் கலப் பணம் சம்பாதிப்பதை விடக் கற்பூரம் விற்றுக் கால் பணம் சம்பாதிப்பது மேல். - பழமொழி

பரிசு கிடைக்காதே என்ற எண்ணமும், அவன் அங்கு போன போது இருந்த சூழ்நிலையும் அவனை இந்தப் பாதகமான செயலைச் செய்ய வைத்து விட்டது.

அன்று இரவெல்லாம் சந்திரனால் தூங்கவே முடியவில்லை. அவனைச் சுற்றிச் சுற்றிப் பசுவும் கன்றும் கத்திக் கொண்டே வருவது போல் கனவு கண்டான். நள்ளிரவில் பசு அவனை வந்து விரட்டி முட்டுவதைப் போல் பயங்கரக் கனவு வந்ததால் 'அம்மா அம்மா' என்று அலறி அடித்துக்கொண்டு எழுந்தான்.

அவன் அம்மா, ''என்னடா, கனவு கண்டாயா? இந்தா, தண்ணீரைக் குடித்து விட்டுப் படு'' என்று கூறினாள். தண்ணீர் குடித்துவிட்டுப் படுத்த பிறகும் கூடக் கனவுகள் வந்து கொண்டுதான் இருந்தன.

மறு நாள் காலையில் அவன் பள்ளிக்கூடம் போனான். இரவு தூங்காத சோர்வு அவன் முகத்தில் திரையிட்டிருந்தது.

ஆயாசமே உருவாய் ராஜம் ஒரு பக்கத்தில் உட்கார்ந்திருந்தான். அவனைச் சுற்றி மாணவ மாணவிகள் குழுமியிருந்தனர். ஒன்றுமே தெரியாதவன் போல் சந்திரன் அவனுடைய இடத்தில் சென்று உட்கார்ந்தான்.

மாணிக்கம் அவனிடம் வந்து, ''டேய், உனக்குத் தெரியுமா? ராஜம் போட்டிருந்த படத்தில் எப்படியோ மை கொட்டியிருக்சாம். பாவம், சோர்ந்து போயிருக்கா'' என்று சொன்னான்.


சந்திரனின் நெஞ்சில் முள் ஆழப் பதிந்தது போல் வலி இருந்தது. எதையும் அவன் வெளிக்குக் காட்டிக் கொள்ளவில்லை. அதைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தான்.

அன்று, பள்ளி ஆண்டு விழா. தலைமை ஆசிரியர் பரிசு பெற்றவர்களின் பெயர்களைப் படித்தார். ''ஓவியப் போட்டி — முதல் பரிசு ராஜம்'' என்று பெயர் கூப்பிட்ட பொழுது, ராஜத்துக்கும் அவன் வகுப்பு மாணவர்களுக்கும் ஒன்றும் புரியவில்லை. அவன் தயங்குவதைக் கண்டு, ''ராஜம், விரைவாக மேடைக்கு வா'' என்றார் தலைமை ஆசிரியர். வேறு வழியின்றி மேடைக்கு வந்த ராஜம் பரிசை வாங்கிக் கொண்டு திரும்பினான். இரண்டாம் பரிசு வேறு ஒரு பையனுக்குக் கிடைத்தது. சந்திரனுக்குப் பரிசு இல்லாததைக் கண்டு எல்லோரும் வியப்படைந்தனர்.

சந்திரனோ மகிழ்ச்சியோடு உட்கார்ந்திருந்தான். விழா முடிந்தவுடன் ராஜத்தைக் கண்டு வாழ்த்துக் கூறினான். அவன், ''இது எனக்கில்லை, தவறாகக் கொடுத்துவிட்டார்கள். நான் போட்டிக்குப் படமே கொடுக்கவில்லை. தலைமை ஆசிரியரிடம் பரிசைத் திருப்பித் தரப் போகிறேன்'' என்றான்.

உடனே சந்திரன், ''வேண்டாம், ராஜம், இந்தப் பரிசு உனக்குரியது தான்'' என்று, தான் அவன் படத்தைச் சிதைத்ததையும் பின் மனம் வருந்தித் தனது படத்தை ராஜத்தின் பெயரில் தலைமை ஆசிரியரிடம் கொடுத்ததையும் கூறி, மன்னிப்பும் கேட்டான். சந்திரன் தான் செய்த தவற்றுக்குப் பிராயச்சித்தம் செய்து கொண்டதை அறிந்தவர்கள் எல்லோரும் அவனைப் போற்றினர்.

மூளைக்கு வேலை



மேலே இருக்கும் ஒன்பது சட்டைகளில் இரண்டே இரண்டு சட்டைகள் மட்டும் ஒரே மாதிரியானவை. அவை எவை? (விடை: ஏழ !ஏழ)



மேலேயுள்ள படத்தில் எத்தனை வண்ணத்துப் பூச்சிகள் இருக்கின்றன? கலர் பென்சிலை எடுத்துக் கொள்ளுங்கள். வண்ணம் தீட்டுங்கள்.

ஓ, அப்படியா!

கிட்டு: உன்னை நான் இந்தப் பக்கங்களில் பார்த்ததில்லையே!

பறவை: நீ என்னை இங்கெல்லாம் பார்த்திருக்க முடியாது. நான் உங்கள் நாட்டுப் பறவை இல்லை. வட அமெரிக்காவிலுள்ள ராக்கி மலைத் தொடரை அடுத்த பகுதிகளில் வசிப்பவன் நான்.

கிட்டு: அதுதானே பார்த்தேன்!... ஆனால் எங்கள் நாட்டுக் காக்கையைப் போல் நடக்கிறாய். அளவிலும் காக்கையைப் போல இருக்கிறாய்.

பறவை: ஆனால் நிறம்? என் உடல் கறுப்பாகவா இருக்கிறது? இல்லையே! சாம்பல் நிறமாக அல்லவா இருக்கிறது! என் பெயர் கொட்டை உடைப்பான்... க்ளார்க்ஸ் நட் கிராக்கர் — என்பார்கள். அது சரி, என் சாப்பாட்டைச் சொல்லுகிறேன் கேள். தினமுமே என் சாப்பாடு சூப்பில் ஆரம்பித்துக் கொட்டையில்தான் முடியும். எப்படி என்கிறாயா? என்னுடைய சூப் எது தெரியுமா? இரண்டு மூன்று வெட்டுக் கிளிகளின் உடல் சாறுதான். அதன் பிறகு உங்கள் குடி இருப்புக்கள் பக்கமாகப் போய் இறைச்சித் துண்டுகள், இல்லாவிட்டால் ரொட்டித் துண்டுகளைத் தேடிக்கொள்வேன். இதன் பிறகு மரங்களுக்குப் போய் அரை டஜன் கூட்டுப் புழுக்(காட்டர் பில்லர்)களை விழுங்கிய பிறகு தளதளவென்ற பெர்ரி பழங்களைச் சாப்பிடுவேன். கடைசியாக பைன் மரத்துக்குப் போய் அதன் கொட்டையில் ஒன்றைக் கொத்திக் கொண்டு பாறைப் பகுதிக்குப் போய் அதைத் தரையில் மோதி உடைத்து அதன் உள்ளிருக்கும் பருப்பைத் தின்பேன். இதுதான் என்னுடைய ஒருவேளை முழு ஆகாரம்.

கிட்டு: ராஜ போகமான சாப்பாடுதான், போ!





மதியூகி பாலாஜி

சத்திரபதி சிவாஜியின் மெய்க் காவலரிலேயே புத்தி சாதுரியத்தில் சிறந்தவர் பாலாஜி. சிவாஜிக்கு மெய்க் காவலர் மட்டுமல்ல, அமைச்சராகவும் உயிர்த் தோழனாகவும் இருந்தார்.

பாலாஜி சிறு வயதில் மிகவும் கஷ்டப்பட்டவர். இராஜபுரி என்னும் ஊரில் பாலாஜி கணக்கராக வேலை பார்த்து வந்தபொழுது, கொங்கண தேசத்தின் மீது சிவாஜி படையெடுத்து வந்தார். அப்பொழுது சிவாஜிக்கு ரகசியமாக ஒரு கடிதம் எழுதினார் பாலாஜி. பாலாஜியின் அழகிய கையெழுத்தைக் கண்டு மகிழ்ந்த சிவாஜி, இக்கடிதம் எழுதியவர் மிகச் சிறந்த அறிவாளியாக இருக்க வேண்டும் என்று அவரை உடனே வரவழைத்தார்.

பாலாஜியின் மதி நுட்பத்தை உணர்ந்த சிவாஜி, தமது மெய்க்காவலருள் ஒருவராக அமர்த்திக் கொண்டார். நாளடைவில் சிவாஜியின் அபிமானத்தைப் பெற்ற பாலாஜி அவரது உயிர்த் தோழரானார்.

பாலாஜிக்குச் சிவாஜியின் உள்ளப் போக்கு நன்கு தெரியும். அவரது அந்தரங்கம் எல்லாம் அறிவார்.

அரசாங்கக் கடிதப் போக்குவரத்துக்கள், சிவாஜிக்கு அறிக்கைகள் சமர்ப்பித்தல் — தயார் செய்தல் ஆகிய பணிகள் அனைத்தையும் பாலாஜியே கவனித்து வந்தார்.

ஒரு சமயம் போர் முனையில் கடுமையாகப் போர் நடந்து கொண்டிருக்கையில் போரின் நிலவரம் குறித்து முழு விவரங்களையும் உடனே எழுதி அனுப்புமாறு பாலாஜிக்குக் கட்டளையிட்டிருந்தார் சிவாஜி. நள்ளிரவு வரையில் போர் நடந்து கொண்டிருந்ததால் போர் முனையிலிருந்து பாலாஜியினால் சிவாஜிக்குக் கடிதம் எழுத முடியவில்லை. ஆகவே, அந்த நள்ளிரவில் சிவாஜியை நேரில் சந்தித்தார் பாலாஜி. பாலாஜியைக் கண்ட சிவாஜி, ''போரைப் பற்றிய அறிக்கை தயாராகி விட்டதா? எங்கே அறிக்கை?'' என்று கேட்டார். பாலாஜி யோசித்தார். 'அறிக்கை தயாராகவில்லை' என்றால் சிவாஜி கோபம் அடைவார். ஆகவே, ''இதோ இருக்கிறது!'' என்று வெற்றுக் காகிதச் சுருளைக் காட்டினார்.

''சரி, அந்த அறிக்கையைப் படி'' என்றார் சிவாஜி.

உடனே பாலாஜி அந்த வெறுந் தாளைக் கையில் பிடித்துக் கொண்டு அறிக்கையைப் படிப்பது போல் தயங்காமல் படிக்கலானார். அந்த அறிக்கையில் எழுதியிருந்த வாசகத்தையும் விவரங்களையும் கண்டு சிவாஜி மிகவும் மகிழ்ந்தார். நெருக்கடியான நேரத்தில் இப்படி விவரமாக அறிக்கை தயாரித்த பாலாஜியை மிகவும் புகழ்ந்தார் சிவாஜி. அப்பொழுது பாலாஜியின் பக்கத்தில் பந்தம் பிடித்துக் கொண்டிருந்த சேவகன் இந்த அதிசயம் கண்டு சிரிக்கவே, உடனே சிவாஜி, 'உண்மை என்ன?' என்பதை விசாரித்து அறிந்தார். பாலாஜி வெறுந்தாளை அறிக்கை என்று படித்ததைக் கோபிக்காமல் அவரது அறிவுத் திறனைப் பாராட்டிப் பாலாஜிக்குப் பரிசுகள் கொடுத்தார்.



சரியான வேளையில் சரியான வேலை...



49F-203R-TAM

'கோகுலம்'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக வி. வைத்தியநாதன் அச்சிட்டு வி. முரளியால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர்: கே. ஆர். ஆத்மநாதன்

REGISTERED NO. M. 9040



